உ

# அறத்தமிழ் ஞானம்

அறம் : 1 க சிந்தனை : 5 ரு

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உண்பதும்
உடுப்பதும் இன்றிக் கெடும்'' —குறள்.


சாதி, சமய, இன வேற்றுமை அற்ற
மாதாந்த ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை

01 - 05 - 1992

## திருவளரின் சிந்தனைத் தொகுப்புகளும் பிற ஆக்கங்களும்

★விநாயகர் தருமநிதிய இலவச வெளியீடு★

—சிக்கனம் - சமத்துவம் - உடல்உழைப்பு—



சிவமயம்

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக்கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக்கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகின்றோம்.

விநாயகர் தரும நிதியம் **நிறுவனர்**

---

## உள்ளே ..................


★ உண்மைதான் இறைவன்
★ தொண்டு
★ தமிழ் வளர்ச்சி
★ உண்மையை உணர்ந்தால்
★ நிறுவனரின் வாழ்க்கை வரலாறு (அங்கம்-2)
★ மூல வியாதி (விளக்கக் கட்டுரை)
★ இறந்தபின் எங்கு செல்கிறோம்
★ தானங்கள் மூவகைப்படும்
★ வீண் பெருமைகள் தவிர்ப்போம்..........




# பதிப்புரை

**1990**ஆம் வருடத்தில் நாம் **விநாயகர் தரும நிதியம்** என்னும் பொது நிறுவனத்தை ஆரம்பித்தோம். எமது சொந்த வாழ்க்கை வரலாறு எழுதி பூர்த்தியாகும்போது இதனை ஏன் ஆரம்பித்தோம் என்ற விடயம் தெரியவரலாம். இவ்விதமான நிறுவனத்தை ஆரம்பிக்குமாறு எமக்கு எவருமே ஆலோசனை கூறவில்லை. நாம் எவ்வித அதிகாரத்தையோ சொந்த இலாபங்களையோ, எவரது செல்வாக்கையுமோ விரும்பி இதை ஆரம்பிக்கவில்லை. இளமையிலிருந்து வளர்ந்த அறநெறிப் பண்பாடு காரணமாகவும், கடும் உடலுழைப்பால் பெற்ற அனுபவம் காரணமாகவும், உண்மைப் பொருளை கண்டுபிடித்தே ஆகவேண்டுமென்ற கடும் உணர்ச்சி காரணமாகவும், இந் நிறுவனத்தை ஆரம்பித்து, பல வெளியீடுகளையும் இலவசமாக வெளியிட்டு வருகிறோம், தற்சமயம் மாத சஞ்சிகையாகவும் உண்மையைக் கண்டுபிடிக்கும் முயற்சியை வெளியிட்டு வருகிறோம். இவ்விதமான நூல்களை இதுகாலவரையில் வேறு எந்த அமைப்புக்களோ தனி நபர்களோ வெளியிட்டதாக நாம் அறியவில்லை. நாம் வெளியிடும் நூல்களில் ஆன்மா உருவாகி ஞான ஒளியில் ஒன்றுசேரும் வரையிலான விளக்கங்களை எழுத முற்படும் போது ஐந்துபூத சேர்க்கை விகிதாசாரத்தைப்பற்றி அடிக்கடி எழுத வேண்டியுள்ளது, இச் சொல் ஏராளமாக வரவே செய்யும், ஓரளவு அனுபவம் மிக்கவர்களுக்குத்தான் இதைப்பற்றி உணரக்கூடியதாய் இருக்கும். வேறு எந்த சமயத்தைச் சார்ந்த நூல்களிலும் இவ்விதமான விளக்கங்கள் வெளிவருவதில்லை. உதாரணமாக சைவசமய நூல்களை எடுத்தால் புராண வரலாறுகளையும், நாயன்மார்கள் சரித்திரத்தையும் கடவுள்களின் சரித்திரத்தையும் திரும்பத்திரும்ப எழுதுகிறார்களே அன்றி வேறு எவ்விதமான புது ஆக்கங்களையோ தொழில் விருத்தி பற்றிய கருத்துக்களையோ தமிழ் மொழிச் சொற்களின் வரலாறுகள் பற்றியோ எழுதப்பெறுவதில்லை. இங்கே நாம் எடுத்துக்கொண்ட செயல் உண்மையான கடவுளை அறிந்தே தீரவேண்டுமெனவும், நாம் கண்டுபிடிக்கும் உண்மைகளை மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டுமெனவும் பொது ஆன்ம ஈடேற்றத்தைக் கருத்திற்கொண்டு செயற்பெறுகிறோம். ஆகவே எமது நூல்களில் வரும் ஐந்துபூதச் சேர்க்கை எனும் சொல்லானது உண்மையே கடவுள் என உணர்த்தவேண்டிய சொல்லாக அமைந்துள்ளது.

எமது வெளியீடுகளிலுள்ள சமர்ப்பணத்தின் மூலம் இவ்வுண்மைகளை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். கிறிஸ்தவ சமயமாக இருந்தாலென்ன, புத்தசமயமாக இருந்தாலென்ன, வேறு எச்சமயமாக இருந்தாலென்ன தங்கள் தங்கள் செயற்பாடுகளில் நடந்தவற்றையே திரும்பத்

திரும்ப எழுதிக்கொண்டிருக்கிறார்கள். சைவ சமயத்திலும் தேவார திருவாசகங்களையும், திருமுறைத் திரட்டுகளையும், புராணங்களையும் திரும்பத் திரும்ப ஒரே விதமாக எழுதுகிறார்களேயன்றி வேறு எவ்வித் கடமை முன்னேற்றத்திற்குரிய கருத்துக்களை எழுதுவதாக இல்லை. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் நடந்ததாகச் சொல்லப்பெறும் பெருமைகளை திரும்பத் திரும்ப வெளிவேஷமான முறையில் எழுதுகிறார்களே அன்றி உள்ளத்தை நெறிப்படுத்தி ஆன்மா ஞான ஒளியில் நற்கதியடைவதற்குரிய கருத்துக்களை வெளியிடுவதில்லை. எண்ணம், சொல் செயல் மூன்றும் சரியாயமைந்தாலே ஆன்மா ஈடேற்றத்திற்கான ஐந்து பூத விகிதாசாரம் உருவாகமுடியும். பெரும்பாலான முறைகளிலும் ஓர் எண்ணத்தை எண்ணி அவ் எண்ணத்தை மக்கள் மனதில் கவர்ச்சிகொள்ளக்கூடிய வகையில் சொல்லவேண்டுமென நினைத்து நல்லமுறையில் கூறுகிறார்கள்.

இச்சொல்லை செயற்படுத்தும்போது சொல்லையும் செயலையும் மாறுபாடான முறையில் செயலாக்குகிறார்கள். சொல்லும், செயலும் மாறுபடும்போது இதனைப் பொய்யென அழைக்கின்றோம். மாறுபாடான சொல், செயல் காரணமாக உண்மையைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. ஆகவே ஐந்து பூத விகிதாசாரமென நாம் திரும்பத் திரும்ப எழுதுவதை தவறான கருத்தாகக்கொள்ளாது, எமது வெளியீடுகளை குறைந்தது 5 தரமாவது வாசித்து உண்மையைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு உங்கள் ஆன்மா நற்கதியடையும் வண்ணம் செயற்படுமாறு அன்புடனும் பண்புடனும் பணிவுடனும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

ஐந்துபூத விகிதாசாரம் பற்றி விளங்கவைப்பதென்றால் முடியக்கூடிய காரியமல்ல. கடும் உடலுழைப்புள்ள சிலருக்கு ஐந்துபூத விகிதாசாரம் மாறுபட்டு அவரது அனுபவம் காரணமாக சிறிது காலத்திற்குள் இதைப்பற்றிய விளக்கத்தை அறிந்துகொள்ளமுடியும். வள்ளுவரது குறளிலே

''வஞ்சக மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்'' என்றும்,

பாரதியார் பாடலிலே ''புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை'' என்றும் திருவாயருளி உள்ளார்கள். ஆகவே பஞ்ச பூத விகிதாசாரம் என்று நாம் சொல்லுவது, புதிய கருத்துக்கள் அல்ல

வள்ளுவரது கூற்றிலே கபட எண்ணமுள்ள ஒருவனது ஒழுக்கத்தைக் கண்டு அவனது உள்ளத்திலேயுள்ள ஐந்து பூதங்களும் நகைக்கின்றன என்கிறார். ஒருவனது மனதை வேறெவராலும் அறியமுடியாது. ஆனால் அவனது மனதிலுள்ள ஐந்து பூதங்களுக்கும் தெரியாமல் அவன் எந்த எண்ணத்தையும் எண்ணமுடியாது. ஆகவே இவனது மனம் ஐந்துபூத ஆட்சிக்குட்பட்டது என்பது முற்றிலும் உண்மையே.



''ஐந்து பூதச் செயல்களின் நுட்பங்கள் பற்றிக் கூறுகின்ற கருத்துக்களை மேற்கு நாடுகளிலே அந்நாட்டு அறிஞர்கள் ஏராளமாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் கூறும் நல்லுலகிலே இந்த ஐந்துபூத செயற்பாட்டின் நுட்பங்கள் பற்றிய கருத்துக்களை எவருமே இங்கு உருவாக்கவில்லை — என்பதால் பாரதியார் மிகவும் மனம் வருந்தியுள்ளார்.

முன்னோடியான பல கருத்துக்களைக் கொண்ட பாரதியார் சமுதாய வளர்ச்சி பற்றி எவ்வளவோ கருத்துக்களை வழங்கியுள்ளார். ஆனால் இப் பஞ்சபூத நுட்ப விளக்கங்கள் அளிக்கக்கூடிய கருத்துக்கள் தமிழில் இல்லையென கவலைப்பட்டுள்ளார். ஐந்து பூத நுட்பங்கள் பற்றிக் கூறும் அறிவு எல்லாருக்கும் ஏற்படமுடியாது. எல்லா ஆன்மாக்களுக்கும் ஐந்து பூத விகிதாசாரங்கள் வெவ்வேறு வகையான அளவினைக் கொண்டதாகவே அமைந்திருக்கும்.

எமது சமுதாயத்துக்குரிய **''விநாயகர் தரும நிதியம்''** என்ற சொல்லும், **''அறநெறி விஞ்ஞான மன்றம்''** என்ற சொல்லும் மாத வெளியீடான **''அறத்தமிழ் ஞானம்''** என்ற சொல்லும் ஒவ்வொரு வாக்கியத்திலும் 3—2—1 என்ற எண்களையும் காற்று, நீர், ஒளி ஆகிய பூதங்களையும், எண்ணம்—செயல்—சொல் ஆகியவற்றையும் உணர்த்தி நிற்கின்றன. **விநாயகர் — அறநெறி — அறம்** என்பன எண்ணத்தையும் **தருமம்—விஞ்ஞானம்—தமிழ்** என்பன சொல்லையும், **நிதியம், மன்றம், ஞானம்** என்பன செயல்பாட்டையும் உணர்த்துகின்றன.

1 = தீ. 2 = நீர். 3 = காற்று.

நிறுவனர்

உண்மையானது எம்மனிதனால் சொல்லப்படுகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டதல்ல; உண்மை தனக்குத்தானே சான்று ஆகிறது உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் சுதந்திரம் முற்றிலும் அவசியமானது.

ஒருவனுடைய கொள்கை எதுவாயினும் ஆகுக. அது முக்கியமானதல்ல; ஆனால் அவன் சிந்திப்பதும், சொல்லுவதும், செய்வதும் முற்றிலும் பொருந்தி ஒன்றுபட்டிருக்க வேண்டும். அப்போது அவன் ஆன்ம சக்தியுடையவன் ஆகிறான். அவன் பேசுவது நிறைமொழி.

உ

# உண்மைதான் இறைவன்

எத்தனை கோயில் கும்பிட்டாலும் அவரவர் செய்த நல்வினை தீவினைப்பயன் அவரவர் அடைந்தே தீரவேண்டும் என யோசிக்காமல் பிழையான வழிகளை கையாண்டுவிட்டு கடைசி நேரத்தில் சங்கரா சங்கரா என்பதில் எதுவித பிரயோசனமுமில்லை. இவர்கள் வழியைப் பின்பற்றி இவர்களது புத்திரர்களும் நடக்க முற்படுவதால் எதிர்வரும் சந்ததியார்களையும் கஷ்டத்துக்குள்ளாக்குகின்றனர். இவர்கள் ஒருகாலத்தில் எல்லாரையும் அடக்கி ஆண்டார்கள். இன்று அவரது சந்ததியினர் அடக்கி ஆளப்படுகிறார்கள். கோவிலைக் கட்டி ஆடம்பர விழாக்கள் செய்தார்களேயன்றி, உண்மைதான் இறைவன் என்பதை உணராமல் கோயில் சந்நிதானங்களிலும் சுயநலம் கருதி பொய் பேசி வந்தார்கள். பிரமா அடைந்த நிலையை அடைகிறார்கள். சீராக ஆராய்ந்து நடந்திருந்தால் இந்த அவலநிலை ஏற்பட இடமில்லை. ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி உண்மை என்பதை உணர மறுக்கிறார்கள். அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர். சிவ சிவ என்கிலர் தீவினையாளர் என்பனவற்றின் சரியான உட்பொருளைத் திரும்பத் திரும்ப ஆராய்ந்து அறிய பஞ்சிப்படுகிறார்கள், எல்லாரும் உண்மை பேசி நடக்க ஆரம்பித்து விட்டால் 75 வீதமான பிரச்சினைகள் அற்றுப் போய்விடும். எல்லாரும் சமநிலை, எல்லாரும் உடலுழைப்பு, எல்லாரும் அடியார்கள். எல்லாரும் உளநலம் பெற்றவர்களாய் வாழ்க்கையில் வாழலாம்.

எங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளின் பெலத்தை நாங்கள் அறிய முடிவதில்லை. நன்றாய் ஆராய்ந்தால் ''டே'' என்று சொன்ன ஒரு சொல் வரவர விரிந்து அதாவது மற்றவர் மடையா என்று சொல்ல அதற்குப்பதில் தடி எடுக்க, அதற்குப் பதில் கத்தி எடுக்க, அதற்குப் பதில் வாள் எடுக்க, அதற்குப் பதில் துவக்கு எடுக்க அதற்குப் பதில் செல்லடிக்க, அதற்குப்பதில் அணுகுண்டை எடுக்க எல்லாம் முடிவடைந்து விடுகிறது. டே என்று சொன்ன சொல்லுக்குள்ள சக்தியைக் கண்டு கொண்டோம். அதற்குப் பதிலாக தம்பி என்று சொன்னால் அது வரவர விரிவடைந்து அன்பு, உண்மை, நியாயம், நீதி, ஞானம் என எல்லாரும் இன்பவாழ்வு வாழ்வதைக் காணமுடியும்.



உ

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

ஊனமுற்றோர், இலவச விநியோகம்,
நன்கொடைகள், வெளியீடுகள் பற்றிய
கணக்கு விபரங்கள்

| | |
|---|---|
| 1-4-90 முதல் 31-3-91 வரை இலவச வெளியீடு இல. 11-ல் வெளியிட்ட மொத்தச் செலவு | 271399 — |
| உறுப்பினர்கள், ஊழியர்கள் சேமிப்பு நிதி | 111600 — |
| கூட்டியது | 382999 — |

**1-4-91 முதல் 31-03-92 வரையிலுள்ள கணக்கு விபரங்கள்;-**

| | |
|---|---|
| ஊனமுற்றோர் இடம்பெயர்ந்தோர் உதவி (1-4-91 முதல் 31-3-92 வரை அரிசி விநியோகம்) | 198991 — |
| முதியோர்களுக்கான அரிசி விநியோகம் (1-4-91 முதல் 31-3-92 வரை அரிசி விநியோகம்) | 37439 — |
| ஆச்சிரமங்களுக்கு அரிசி விநியோகமும், தீபாவளிப் புடவை விநியோகமும் | 11560 — |
| கல்விக்கொடை, பரிசளிப்பு, ஆசிரியர் நன்கொடைகள் | 26396 — |
| அறநெறி விஞ்ஞான மன்ற 5-ம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கான பரிசில்கள் | 23600 — |
| நன்கொடை, வாசிகசாலை பத்திரிகைகள், பாடசாலைத் திருத்தங்கள் | 26897 — |
| மூன்று சனசமூக நிலையங்களுக்கான சேமிப்பு, வங்கி வைப்புப் பணம் | 36000 — |
| வீதித் திருத்தம் | 2700 — |
| நூல் வெளியீடு 12ம் இலக்கம் முதல் 22ம் இலக்கம் வரை (19100 பிரதிகள்) | 333400 — |
| அறத் தமிழ் ஞான மாத சஞ்சிகை 1-1-92 தை, மாசி, பங்குனி, சித்திரை மாத வெளியீடுகள் 2100 பிரதிகள்வீதம் | 87500 — |
| தமிழர் புனர்வாழ்வு கழகம் மூலம் இடம் பெயர்ந்தோர், ஊனமுற்றோர்க்கான அரிசி விநியோகம் | 149600 — |
| வதிரி பரமானந்த ஆச்சிரம பங்குனி மாதச் செலவு (14-3-92 முதல்) | 35353 — |
| உறுப்பினர்கள், ஊழியர்கள் சேமிப்பு நிதி | 117000 — |
| மொத்தச் செலவு | 1086436 — |

(பத்து இலட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்றி முப்பத்தாறு)

ஆ. சி. முருகுப்பிள்ளை
நிறுவனர்.

ஸ்.—

## தருமகர்த்தா சபையினரின் நன்றியும் பாராட்டுதலும்

எமது நிறுவனரால் சமர்ப்பிக்கப்பெற்ற நிதியத்தின் நிதியறிக்கையினை ஆழமாக ஆராயுமிடத்து அவரது எண்ணங்களும், சிந்தனைகளும் செயற்பாடுகளும் தனியே அவரது வெளியீடுகளில் மட்டும் பிரதிபலிக்காது செயலிலும் காட்டியுள்ளதை நாம் பார்க்கிறோம். தனது பெயரையோ, சுகவாழ்வையோ விரும்பாது, கைகள் பூரணமாக செயற்பட முடியாத நிலையிலும் கடமையை உணர்ந்து செயல்பெறுபவராகவும் சிறந்த நிர்வாகியாகவும், சத்தியத்தின் வழிநிற்கும் உத்தமராகவும் எம்மிடையே உயர்ந்து நிற்கின்றார்.

அவர் இவ்வாண்டு செய்த மொத்தச் செலவு ரூ. 1086436/- ஆகும். இப்பணம் முழுவதும் அன்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் போன்றவர்களிடமிருந்து பெற்றவையல்ல. முழுக்க முழுக்க இந்த நெல் ஆலையின் தொழிற்பாட்டிலிருந்து நிறுவனர் அவர்களின் சிக்கனம், நேர்மை, கடின உழைப்பு மூலம் பெறப்பெற்றவையாகும்.

அறவழியில் ஈட்டிய பொருளை பயன்கருதா அறவழிப் பணிகளுக்கு அள்ளி வழங்கி விநாயகர் தரும நிதியத்தின் பெருமையை தமிழ்கூறும் நல்லுலகம் உணரும் வகையில் செயல்பாடுகளை மேற்கொண்டமைக்காக நிறுவனருக்கு நிர்வாக உறுப்பினர்களாகிய நாம் எமது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தனியே அறப்பணிகள் மட்டுமன்றி நிதிய ஆலையில் பணிபுரியும் ஊழியர்கள் — உறுப்பினர்கள் ஆகியோருக்கு சேமிப்பு நிதி போன்றவற்றை நடைமுறைப்படுத்தி அவர்களை ஊக்குவிப்பதையிட்டு நாம் மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறான நற்பணிகளை மேற்கொள்வதற்கு எவரது கையையும் எதிர்பாராது தனது சொந்தக்காலில் நின்று செயல்பாடு—உண்மை—மன உறுதி என்பனமூலம் எம்மையும், நிதியத்தையும் வழி நடாத்திச் செல்லும் நிறுவனர் ஆ. சி முருகுப்பிள்ளை ஐயா அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் ஆத்ம திருப்தி அடைகிறோம்.

| | |
|---|---|
| வ. கு. கணபதிப்பிள்ளை<br>உப தலைவர் | வ. ச. செல்வராசா<br>செயலாளர்-பொருளாளர் |
| க. தங்கராசா<br>நிர்வாகப் பொறுப்பாளர் | அ. துரைசிங்கம்<br>சு. வேதாரணியம்<br>கோ. கண்மணி<br>உறுப்பினர்கள் |



நூல் வெளியீடு :

| | | | | |
|---|---|---|---|---|
| 11-ம் | வெளியீடு மிகுதி | | | 5000 — |
| 12-ம் | ,, | 1600 | பிரதி | 26500 — |
| 13-ம் | ,, | 3000 | பிரதி | 25000 — |
| 14-ம் | ,, | 1600 | பிரதி | 16000 — |
| 15-ம் | ,, | 1600 | பிரதி | 21000 — |
| 16-ம் | ,, | 1600 | பிரதி | 32500 — |
| 17-ம் | ,, | 1600 | பிரதி | 34500 — |
| 18-ம் | ,, | 1600 | பிரதி | 29000 — |
| 19-ம் | ,, | 1200 | பிரதி | 27600 — |
| 20-ம் | ,, | 1600 | பிரதி | 19000 — |
| 21-ம் | ,, | 700 | பிரதி | 14500 — |
| 22-ம் | ,, | 1600 | பிரதி | 31060 — |
| 16-ம் | ,, | 700 | பிரதி | 17500 — |
| 18-ம் | ,, | 700 | பிரதி | 15000 — |
| சாரணர் கைநூல் | | 550 | பிரதி | 13000 — |
| தாள்கள் அச்சிடல் | | | | 6300 — |
| | | | மொத்தம் | 333400 - |

ஆ. சி. முருகுப்பிள்ளை
நிறுவனர்

கிளிநொச்சி அம்பிகைபாகன் 27-3-92-ல் அனுப்பிய கவிதை

### அறத் தமிழ் ஞானம்

விநாயகர் தரும நிதியம் அதனின்
நிறுவனர் ஐயா அவர்களே!
அறத் தமிழ் ஞானம் என்றோர் சஞ்சிகை
அழகுடனே உலாவரக் கண்டேன்.
செந்தமிழில் ஒரு தேனருவி என்றே
நான் அதனை நினைத்தேன்.
அத்தனை அம்சமும் ஒத்ததடமாகிப்
புத்துயிர் அளிப்பதெம் தமிழன்னைக்கே.
இத்தனை காலமும் எங்கே கிடந்தாய்!
எத்தனை மனங்களைக் கவர வந்தாய்
என நான் ஏங்கினேன் உன்னைக் கண்டே.
மனமது கனிந்தே வாழ்த்து கின்றேன்.
கண்முன்னே தெரிகின்ற மன்மத வீதியில்
தவழ்ந்து நிமிர்ந்தே நீ நடைபோடு.

—அம்பிகைபாகன்—

௮ —

# தொண்டு

தொண்டு என்பது பல வகைப்பட்டதாகும். வசதி குறைந்தவனுக்கும். நோய்வாய்ப்பட்டு அங்கவீன மானவனுக்கும், பராமரிப்பார் இன்றி அலையும் ஓர் ஏழைக்கும் தொண்டு செய்வதே நாம் பிறப்பெடுத்தலின் முக்கிய கடமையாகும். அவ்வாறு தொண்டு செய்ய முற்படுவோர்கள் எல்லோரும் தொண்டர்கள் என்று கூறிவிட முடியாது. தமது சுயநலத்துக்காகவும் பணத்துக்காகவும் பேருக்காகவும் தொண்டு என்ற போர்வையில் அனேகர் முன்வருகிறார்கள். இவர்கள் எல்லாரையுமே தொண்டர் என்ற வரையறைக்குள் கருதமுடியாது. தொண்டு செய்வதற்குரிய ஐந்துபூத விகிதாசாரம் அமைந்தால் மட்டுமே உண்மையான தொண்டைச் செய்யமுடியும். பல்லாயிரம் வருடங்கள் முன்தோன்றிய எமது சைவசமயத்திலே சில சில ஆயிரம் வருடங்களில் ஒருமுறையில் மட்டுமே நாயன்மார்கள் தோன்றியுள்ளதாக புராண வரலாறுகள் கூறுகின்றன, ஆனால் எல்லாக் காலங்களிலும் நாயன்மாரைப் போன்றவர்கள் தோன்றவில்லை. பல ஆயிரம் வருடங்கள் தோன்றிய மனிதர்களின் அளவு கோடானுகோடிக்கணக்காக இருக்கலாம். ஆனால் ஞான ஒளியில் இரண்டறக் கலந்து முத்தியடைந்தவர்கள் அறுபத்திமூவர் மட்டுமே என நாயன்மார் சரித்திரம் கூறுகிறது. இவ்வளவு கோடானு கோடி மக்களில் ஏன் பல்லாயிரக்கணக்கானோர் ஞான ஒளியில் முத்தியடையவில்லை. இவற்றைப் பற்றி நாம் எமது சிந்தனையில் எடுத்து ஆராயும்போது பல வாறான விளக்கங்கள் தென்படுகின்றன. ஆனால் எல்லாருக்கும் அவ்விளக்கம் தென்படும் என்பதை எவருமே அறுதியிட்டுக் கூறமுடியாது. இது ஐந்துபூத விகிதாசாரத்திலுள்ள ஞானஒளி. காற்று விகிதாசாரத்துக்கு அமைவாகச் செயல்படுவதாகவே தோன்றுகின்றது. எமது சமய வரலாற்றிலே முத்தியடைந்தவர்கள் என்று கூறும் வரிசையிலே எந்த ஒரு வேந்தனையோ அல்லது திருக்குறளை இயற்றிய வள்ளுவரோ. ஆத்திசூடியை இயற்றிய ஔவையாரையோ ஞான ஒளியில் முத்தியடைந்ததாக கூறவில்லை. வள்ளுவர் தனது உடலை இறுதிக் காலத்தில் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் இரையாக்கும்படி கூறி அப்படியே மற்றவர்கள் செய்துள்ளார்கள். ஆனால் ஔவையாரைப் பற்றி எமது சிந்தனையிலெடுத்து ஆராயுமிடத்து அரிய விஷயங்கள் என்ற ஒரு பாடலைப் பாடியுள்ளார்.



''அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடராதல் அரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்த லரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.''

இப்படியே கூறியபடி மானிடராதல் அரிது என முதலாவதாக கூறுகிறார். இங்கே இவர் ஐந்துபூத விகிதாசார நடைமுறையை நன்றாக அறிந்தே இப்பாடலில் விளக்கம் கொடுக்கிறார். அதிலே முதலாவதாக மானிடராக பிறக்கவேண்டுமென்றால் ஐந்துபூத விகிதாசாரம் சேர்ந்தாலும் குருடு. செவிடு. பெண்மை நீங்கிப் பிறத்தல் வேண்டுமென்று கூறுகிறார். இதிலிருந்து ஆண் பெண் பிறப்புக்கு ஐந்துபூத விகிதாசாரத்தில் பெண்மைக்கு நீர்ப்பூத விகிதாசாரம் கூடியும், ஆண்மைக்கு ஒளிப்பூத விகிதாசாரம் கூடியும் அமைந்துள்ளதை உணர்ந்துள்ளோம்.

அடுத்து ஔவையார் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது என்கிறார். அதாவது ஞான ஒளிக்குரிய ஐந்துபூத விகிதாசாரமும் அந்த ஞானத்தை அடைவதற்குரிய அறிவான காற்றுப் பூத விகிதாசாரமும் கூடுதலாக அமைவது அரிதாகும் எனக் கூறுகிறார். ஐந்துபூத விகிதாசாரங்கள் அமைந்தாலும் ''தானமும் தவமும் தான்செயல் அரிது எனவும் கூறுகின்றார். இங்கு நாம் எமது சிந்தனையை வளரவிடுகின்றோம். தானம்செய்தல் என்பது தான் தான் பாடுபட்டு தேடிய பணத்திலிருந்தே செய்யப்பெறல் வேண்டும். அவாது மரபுவழியிலுள்ள முதியோர் தேடிவைத்த பணத்தையோ, பொருளையோ, தவத்தையோ தானம் செய்தால் அவர்களது பூத விகிதாசாரம் மாறுபட்டு ஒளிப்பூதம் கூடமுடியாது எனக் கூறுகிறார். தான் தான் தேடி பாடுபட்டு பெற்ற பணத்திலிருந்தே தானம் செய்ய வேண்டுமென உறுதியுடன் கூறுகிறார். ஆகவே அறப்பணிகள் அனைத்தும் தாம்தாம் உடல்வருத்தி உழைத்த பொருளாலேயன்றி வேறுவிதமான முறையில் செய்வன பிறப்பறுக்கும் செயலாக முடியாது என அரிதான செயல் வரிசைகளில் கூறியுள்ளதை உறுதியுடன் மிகமிக உண்மைப் பொருள் என நாம் கூறுகிறோம். ஆகவே ஔவையார் ஓர் பெண்ணாக இருந்த காரணத்தினால் ஆணாகப் பிறந்தே முத்தியை அடைய முடியும் என அவர் கூறுவதை நாம் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளுகிறோம்.

# தமிழ் வளர்ச்சி

குழந்தையின் சொல்வளம் பெருக அறிவும் சொல்லுந் திறனும் பெருகுவது கண்கூடு. அது போலவே மொழியில் சொல்வளம் பெருக அம்மொழி பல நுண்கருத்துக்களையும், நுண்ணுணர்வையும் வெளிப்படுத்தும் ஆற்றல் உடையது என்பது யாவரும் அறிந்த உண்மை.

ஆகவே வளர்ந்து வருகின்ற அறிவியற் கருத்துக்களை எடுத்துரைக்கும் சொற்களையும், கலைச் சொற்களையும் எமது தாய் மொழியான தமிழ் மொழியில் ஆக்குதல் எமது தமிழ் அன்னைக்குச் செய்யவேண்டிய தலையாய கடமையாகும். இந் நாளில் மொழியை வாழ்விக்கும் சொற்களை ஆக்கி வளர்ப்பது பொது மக்களால் முடியாத காரியம். அவர்களின் வாழ்க்கை நிலை அச் செய்கைக்கு இடம் தருவதாக இல்லை.

எனவே மொழியை வளர்க்கும் கடமையை புலவர்கள் எழுத்தாளர்கள், மொழி ஆர்வம் மிக்கோர் மேற்கொள்ள வேண்டியது அவர்களது கடமையாகின்றது. ஒரு மொழியில் பிற மொழிச் சொற்கள் கூடியளவில் கலக்கப்படுமேயானால் அம்மொழி மரபு அழிந்து, தனித்தன்மை கெட்டு வேற்று மொழி தோன்றக்கூடும். வேற்றுமொழி தோன்றியதும், பழைய மொழியினரின் கலை, பண்பாடு, இலக்கியங்கள் மறைந்துவிடும். இனம் சிறந்து வலிமை குன்றும். இக் காரணத்தினால் எல்லா இனத்தவர்களும் மொழியை தம் கண்ணாகப் பேணி வருகின்றனர்.

பிறமொழிக் கலப்பினால் சிறிது காலங்களின் பின் அம்மொழி கலை, பண்பாடு இலக்கியம் யாவற்றையும் இழந்து வேற்றுமொழியாக உருவாகி எமது தாய்மொழி அழிந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும். தாய்மொழி வீழ்ச்சியை நோக்காது பிறமொழியை வேண்டியளவு கலந்து வழங்க முற்படுபவர்கள் முற்றாகத் தாய் மொழியை விட்டு பிறமொழியைத் தம் மொழியாகக் கொள்வதையே அவர்கள் செய்ய வேண்டும். இன்று மக்கள் பேசும் தமிழ் மொழியைக் கூடுதலான விகிதாசாரத்திலும் எழுதும் தமிழில் 1/3 பங்கிற்கு மேலும் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளதைக் காண்கின்றோம்.



மேலும் தேவையானளவு கலந்து பாவிக்க முற்படின் சிறிது காலத்தினுள் தமிழ்மொழி அற்றுப்போகும் நிலை ஏற்படலாம். மொழிப்பற்று இனப்பற்று, நாட்டுப்பற்று உள்ள நல்ல தமிழர்கள் தமிழைத் தூய்மைப்படுத்த உரிய தமிழ்ச் சொற்களை ஆக்கி பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்த முன்வருதல் வேண்டும். ஒருவன் தன்னினத்துக்குச் செய்யும் மிகப்பெரும் கடமைகளில் இதுவும் ஒன்றாகும்.

நம் நாட்டுப் பெரியோர்கள் அருளிய உண்மைகளைத் தாய்மொழி வாயிலாக உணரும் ஆற்றலையும் வன்மையையும் இழந்து அவைகளை வேறு மொழியூடாக அறிந்து கொள்ளும் நிலையை நாம் அடைந்திருக்கின்றோம். அரும்பெரும் நூல்களின் கருத்துக்களை நாம் செவ்வனே உணரவேண்டுமானால் அவைகளைத் தாய் மொழிமூலம் உணர்வதே சிறப்பு என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

விமானங்களில் வானிலே பறக்கக் கற்ற மக்கள் கடலில் நீந்தக் கற்ற மக்கள் நிலத்தில் அமைதியாக வாழ முடியவில்லை. படுக்கையில் படுத்தவுடன் உறங்கவும் முடியவில்லை. எல்லாம் வேண்டும் என்ற பண்பு ஒட்டிக்கொண்டிருக்கும் வரை மனிதன் அமைதியைக் காணமாட்டான்.

---

கடவுளின் அம்சம் இல்லாத எதுவும் உலகில் இல்லை. அரசன் அரசாட்சி செய்வதுபோல் ஆண்டவன் கயிலாயத்திலோ, சத்தியலோகத்திலோ, வைகுண்டத்திலோ வசித்து உலகைப் பாதுகாக்கவில்லை. கண்ணில் தெரிவதெல்லாம் கடவுளின் தோற்றம். சிவம் என்ற சொல்லுக்கு பொருள் உண்மை (மங்களம்).

— ௭ —

## உண்மையை உணர்ந்தால் ......

மாணிக்கவாசகரின் கசிந்துருகும் வாசகத்தை மனம், வாக்கு, காயம் என்பவற்றுள் முதலாவதான எமது மனத்தில் உண்மையைக் குடைந்து அவரது புராண உண்மைகளை ஞான அறிவு மூலம் உணர்ந்து எமது ஆன்மாவிலுள்ள ஐந்துபூத ஞான ஒளி விகிதாசாரத்தை மேல்நிலையடையக்கூடிய நாளாக மார்கழித் திருவாதிரை நாளாக ஞானிகள் வகுத்துள்ளார்கள். இன்று எம்மில் பெரும்பான்மையோர் இக்கருத்தை உணர முடியாமல் எமது ஆன்ம அலையின் ஐந்துபூத ஞான ஒளி விகிதாசாரம் கீழ்நிலைக்கு மாறுபடக்கூடிய செயல்களில் ஈடுபடுவதைத் தினசரி கண்டு வருகிறோம்.

இம் மாணிக்கவாசகரின் ஒரேயொரு வாசகத்தை மட்டும் எமது சிந்தனையில் எடுத்து உள்ளத்தைக் குடைந்து உண்மையை அறிய விரும்புகிறோம். அவர் எத்தனையோ பல நூற்றுக் கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார். ஆனால் நாம் இங்கு கூற முற்படுவது அவரது ஒரேயொரு பாடலிலுள்ள உண்மைக் கருத்தையே. நாயன்மார்களுள் மிக முக்கியமாக மாணிக்கவாசகர் சரித்திரத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்காக எத்தனையோ புராணங்களை ஆக்கியிருக்கிறார்கள். மார்கழி மாதத் திருவாதிரை நாளில் அவர் இறைவனுடன் ஞான ஒளியில் இரண்டறக் கலந்ததாக உறுதியுடன் கூறுகிறார்கள். அவரது ஒரு பாடலாவது:-

"உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே."

இங்கே நாம் எமது சிந்தனையை வளர விடுகிறோம். அவர் ஞான ஒளியில் இரண்டறக் கலந்தது உண்மைதானா? என்று உள்ளத்தைக் குடைந்து ஆராய்கிறோம். இப்பாடலை எமது சமயத்திலுள்ள பெரும்பான்மையினரும் கோயில் முன்னிலையில் பாட முடியாதவாறு அமைத்துள்ளார்கள்.



உண்மையே கடவுள் என அறுதியிட்டுக் கூறும் நாம் உண்மைக்கு மாறான ஒன்றை எவ்விடத்திலுமே கூறமுடியாது. பொய் சொன்ன காரணத்தால் பிரமாவுக்கு ஒரு தலை இல்லாமல் போனது என்று கூறியது சரிதானா? அவ்விதம் தவறாக ஆலய முன்னிலையில் கூறுவாராயிருந்தால் அவர் சைவசமயத்தைச் சேர்ந்தவராக இருக்க முடியாது. இப் பாடலுக்குரிய விளக்கத்தைத் தர முன்வருகிறோம்.

உற்றாரை யான் வேண்டேன் — எமது சொந்தக்காரர் எவரையும் எனக்குத் தேவையில்லை.

ஊர் வேண்டேன் — நான் பிறந்த ஊரையும் எனக்குத் தேவையில்லை.

பேர் வேண்டேன் — எமக்குப் பிதா, மாதா ஒருபெயரை வைத்திருக்கலாம். அப்பெயரையும் நாம் பிரதானமாகக் கருதவில்லை.

கற்றாரை யான் வேண்டேன் — அறிவிற் சிறந்த எந்த பெரியவரையும் எனக்குத் தேவையில்லை. ஆனால்,

கற்றாவின் மனம்போல — கன்றைப் பிரிந்த பசுவானது அக்கன்றைத் தேடி அழும் மனம் போல,

கசிந்து உருக வேண்டுவனே — எந்த ஒரு பொருளும் ஒளியைக் கண்டால் கசிய முடியும். அது போலவே எனது மனமானதும் கசிந்து உருகும்படியான மனத்தை எனக்குத் தா என வேண்டுகிறார். மனம் கசிந்து உருகும்போது ஆன்மாவிலுள்ள நீர்ப்பற்றுக் குறைகிறது.

ஆனால் நாம் இங்கே எமது சிந்தனையை வளரவிட்டு உள்ளத்திலுள்ள உண்மையைக் குடைகிறோம். எமது சைவ சமயத்திலுள்ள மக்கள் சமயக் கடமையாக ஆலயத்திற்குப் போகிறார்கள். போகும்போது அவர்கள் 'தங்களுடைய பிள்ளை குட்டிகளையும் கூட்டிக்கொண்டே போகிறார்கள். அப் பிள்ளைகுட்டிகளும் கஷ்டமின்றி வாழ்ந்து தங்களை விட மேல்நிலையில் வரவேண்டுமென்று ஆலயத்தில் வேண்டுகிறார்கள். இவ்வாறான குணமுள்ள மக்கள் உற்றாரை யான் வேண்டேன் என ஆலய முன்னிலையில் ஓதுவார்களாக இருந்தால் அவர்களினது முறையீடு முழுப் பொய்

என்பது சொல்லாமலே எமக்கு விளங்குகின்றது. ஏனெனில் அவர்களின் மனத்திலுள்ள விஷயங்களுக்கும், இப் பாட்டிலுள்ள விஷயங்களுக்குமிடையில் ஒன்றுக் கொன்று முரணான எதிர்த் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்வாறாக ஆலயத்தில் கூற முடியாத மக்கள் ''கற்றாவின் மனம் போல'' என்ற வரியைத் துப்பரவாகவே கூறமுடியாது என்பதை நாம் அறுதியிட்டுக் கூறுகின்றோம். இதற்குரிய விளக்கத்தை ஆராய எமது சிந்தனையை வளர விடுகிறோம். உள்ளத்தைக் குடைகிறோம். கற்றாவின் மனம் போல என்று சொல்லும்போது கன்றைப்பிரிந்த பசுவானது இக்கன்றின் சிறு பராயத்தையும் அக்கன்றுக்கு நேரும் இடையூறையும் மனதில் கொண்டு அக் கன்றை ஓலமிட்டுக் கூப்பிடுகிறது. ஆனால் இங்கே இக்கன்றினால் இப் பசு எந்தவிதமான பிரதிப் பிரயோசனமும் அடையப் போவதில்லை. இக்கன்று 6, 7 மாதங்களில் தன்னை விட்டுப் பிரிந்துவிடுமென்பதும் அத் தாய்ப் பசுவிற்குத் தெரியும். இவை எல்லாவற்றையும் நன்றாய் உணர்ந்த இப் பசுவானது தனது உடல் சுகத்தைச் சிறிதும் கருதாது, தான் செய்ய வேண்டிய கடமையென்பதைப் பூரணமாய் உணர்ந்து கன்றை ஓலமிட்டுக் கூப்பிடுகிறது. ஆனால் நாம் இங்கே இன்னும் எமது சிந்தனையை வளர விடுகிறோம். உள்ளத்தைக் குடைகிறோம். இப்பசு செய்த தன்னலங்கருதாக் கடமையை பகுத்தறிவு மிக்க மனிதராகிய நாம் ''கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே'' எனச் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வதாயிருந்தால் அது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைத்து வைத்த தன்மை போலவே இருக்கும். நாம் கோயிலுக்குப் போகும்போது எமது பிள்ளை குட்டிகளை கோயிலிலே கூட்டிச் சென்று அவதானமாகக் கவனிக்கிறோம். தற்செயலாக அக்கோயில் வாசலில் எமது பிள்ளை பிரவேசிக்க எத்தனிக்கும்போது தடக்கி விழுந்து சிறு இரத்தக் காயம் ஏற்பட்டுவிடுகின்றது என வைத்துக்கொள்வோம். இந்த நேரத்தில் நாம் கடவுளை வேண்டுவது என்னவாய் இருக்குமென்பதை நமது உள்ளத்தைக் குடைந்து குடைந்து ஆராய்கிறோம். அக் குழந்தையின் காயத்தை ஆற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறோம். அதற்காக ஆண்டவனை வேண்டுகிறோம்.



எமது பிற்காலத்தில் இப்பிள்ளை எமக்கு ஒரு நேரத் தண்ணீரையோ, உணவையோ ஊட்ட முடியும் என உணர்ந்து அப்படியான பிள்ளைக்கு இவ்விதமான காயம் ஏற்பட்டு ஏதாவது தவறுதல் ஏற்பட்டுவிட்டால் எமக்கு ஏற்படும் கஷ்டங்களை நினைந்து எமது சுய தேவையை கருத்தில் கொண்டு இப் பிள்ளையின் காயத்தை ஆற்றுமாறு ஆண்டவனை வேண்டுகிறோம். இன்னும் எமது சிந்தனையை வளரவிடுகிறோம். கன்றைப் பிரிந்த பசுவானது அணுவளவு கூட தன்னலங் கருதாது அக் கன்றைக் கூப்பிட்டது. எமது பிள்ளைக்கு ஏற்பட்ட காயத்தை மாற்றும்படி வேண்டும் எமது சுயநல மனநிலை, கன்றைப் பிரிந்த பசுவின் மனநிலைக்கு ஈடாகாது. கிட்டவும் நெருங்க முடியாது. எமது மனநிலை முழுக்க சுயநல உணர்வு. ஆனால் இப்பசுவின் மனநிலை முழுக்க முழுக்க தியாக உணர்வு. இதிலே எவ்வித கருத்து வேற்றுமைக்கும் இடமில்லை. அப்படி இக் கருத்துத் தவறென யாராவது வாதிட விரும்பினால் நேரில் வந்து உங்கள் மன எண்ணத்தைத் திருப்திப்படுத்திக் கொள்ளலாம்.

மாணிக்கவாசகரது இன்னும் ஒரு பாடலை எமது சிந்தனையில் எடுத்து அதற்கு விளக்கம் தர முற்படுகின்றோம்.

''இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்தே
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாகும் திருப்பெருந்துறை யுறைசிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

இவ் வாசகத்தில் தேவையான ஒரு பகுதியை மட்டுமே ஆராய முற்படுகிறோம். ''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாகும் சிவனே.'' எமது எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒத்தபடி அமைய வேண்டுமென்பதே உண்மைப் பொருளின் கட்டளையாகும். எமது சிந்தனை ஒன்றை நினைக்க. சொல் வேறொன்றாக வர செயல் இன்னுமொன்றாக வருவதை கண்ணாரக் கண்டு

வருகிறோம். ஆகவே எந்த ஒரு மனிதனிடத்தும் சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒரே மாதிரியாக அமைவது மிகக் குறைவு. இவ்வாறு அமையாத காரணத்தினால் எமது ஐந்து பூத விகிதாசார அமைப்பில் சில அணு குறைந்தும் வேறு சில அணு கூடியும் உருவாவதையே மணிவாசகர் எமக்கு விளங்க வைக்கிறார். அதாவது நாம் ஒன்றை நினைத்துவிட்டோம். உதாரணமாக எமது முன்னாலுள்ள ஒரு எறும்பை அது கஷ்டப்படாமல் வாழவேண்டுமென்ற நோக்கோடு தூரத்தில் கொண்டுபோய்விட எண்ணுகிறோம். இவ்வெண்ணம் எமது ஐந்துபூத விகிதாசாரத்தில் சில அணுவளவான ஒளிப்பூதத்தை கூட்டவல்லதாகும். இந்தவிடத்தில் எமக்கு கிட்ட ஒரு சிநேகிதர் வருகிறார். எமது எண்ணத்தை நாம் செயலாற்ற முற்படுகையில், அவர் இவ் எறும்பு கடித்து விடும் என நினைத்து, அவ்வெறும்பைக் கொலை செய்து விடுகிறார். இங்கே நாம் நினைத்தது ஐந்துபூத விகிதா சாரத்தின் ஒளிப்பூதத்தை கூட்டவல்ல செயலாகும். ஆனால் சிநேகிதர் செய்த தவறான செய்கையால் எமது சில அணுவளவு கூடிய ஞான விகிதாசாரம் சில அணுவளவு குறைகின்றது. சினேகிதன் தவறான அறிவினால் செய்த செய்கை காரணமாக சிநேகிதனது ஐந்துபூத விகிதாசாரத்தில் சில அணுவளவு நீர் பூதத்தைக் கூட்டுகின்றது.

இங்கே செய்ய நினைத்த நற்கருமத்தை சினேகிதனது அறிவுத்தன்மை பாதகமான செயலாக்கிவிட்டது. எமது பூத விகிதாசாரத்தில் கூடவேண்டிய ஞான ஒளிப் பூதம் குறைந்ததுமல்லாமல் தவறான செய்கைக்குரிய நீர்ப்பூதத்தையும் கூட்டியுள்ளது.

ஆகவே வாசகத்தில் கூறியுள்ள '' சென்று சென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து ஒன்றாகும் சிவனே '' என்ற வாசகத்திற்குரிய கருத்தினை அறிந்து கொண்டோம். மேற்கொண்டும் மணிவாசகர் கூறுகிறார். '' ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை'' அதாவது ஐந்து பூதங்களின் செயற்பாடுகள் என்று ஒன்று இல்லை. அல்லாது போனால் ஐந்து பூதங்களின் செயற்பாடுகள் இல்லாத எப்பொருளுமேயில்லை. இந்த பூதங்களின் கோடானுகோடி அணுக் கணக்குகளை எவருமே அறிய முடியாது. இங்கே மணிவாசகர் எமக்கு



உள்ள ஐந்துபூத விகிதாசாரங்கள் கூடிக் குறைவதைப் பற்றியும் எமது செயற்பாடு இதற்கு முக்கியமானதாய் அமைகின்றது என்பது பற்றியும் ஐந்துபூத விகிதாசாரம் இல்லாத எப்பொருளும் இல்லை என்பது பற்றியும் மிகவும் ஆணித்தரமாக எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி எமக்கு உண்மையை விளங்கவைத்துள்ளார்.

திருநாவுக்கரசு நாயனாருக்கு சமண சமய வாதிகள் செய்த கொடுமை, சமயம் என்பது சுயநலவேட்கை கொண்டது என்பதையும், சமயவாதிகள் எவ்வித கொடுமைகள் செய்யவும் தயங்கமாட்டார்கள் என்பதையும் நன்றாய் விளக்குகிறது. இரக்கமுள்ள எந்த ஒருவனும் மற்றவன் சமயம் மாறினால் அதற்காக தெண்டம் கொடுக்க முற்படமாட்டான். ஆகவே '' சமயம் '' சமயத்துக்கேற்ற கொள்கையைக் கொண்டது என்பது தெள்ளிதில் புலப்படுகிறது.

௭—

## ( நிறுவனரின் வாழ்க்கை வரலாறு )

### அங்கம் - 2

| | | | |
|---|---|---|---|
| கு 104<br>பு 104 | செ<br>8 | 12 | ல / 26 |
| கே 98<br>வெ.91 | இரக<br>நிலை<br>29 - 03 - 23 | | 2 |
| | | | சந் 37<br>ரா 44 |
| 7 | 6 | வி<br>63 | சனி<br>52 |

சென்ற வெளியீட்டில் பதினெட்டு வயது வரையில் [1941] நடந்த வரலாறை எழுதியிருந்தோம். அதன் பிற்பாடு நடந்தவற்றில் ஒரு பகுதியை இங்கே எழுத முற்படுகிறோம். அதன் பிற்பாடு 1943இல் எமது விவாகம் நடைபெற்றது. எமது மனைவியாருடன் விவாகம் நடப்பதற்கு சில காலங்களின்முன் அவ தமையனாரது கடையில் நின்றசமயம் சாமான் வாங்கப் போன இடத்தில் ஓர் வாக்குவாதம் ஏற்பட்டுவிட்டது. இதைப் பற்றித்

தெரியாமல் எமது சிறிய தாயாரும், உறவினரும் எமது ஆலோசனையின்றி விவாகத்திற்குரிய ஒழுங்கைச் செய்திருந்தார்கள். இது எமக்கு விருப்பமில்லாத ஒரு செயலென நாம் அவர்களிடம் சொன்னபோது பெண் வீட்டார் பலகாரம் செய்துவிட்டார்கள். பெண்ணின் மனதை நோகப் பண்ணுவது சரியல்ல எனக் கூறினார்கள். அந்நேரம் எமக்கும் அது சரி எனப்பட்டதால் சம்மதித்து மனதுக்குப் பிடிக்காத ஓர் விவாகத்தைச் செய்தோம். அக்காலத்தில் எம்மிடம் எதுவித பணமும் இருக்கவில்லை. மனைவியின் தாலியாக ஆறு சதத்திற்குரிய மஞ்சள் நூலையே கட்டினோம். மனைவி வீட்டிலும் எவ்வித சீதனப் பணமும் நாம் வாங்கவில்லை. அவவது வீடு கால்வாசி ஓட்டினாலும், முக்கால்வாசி ஓலையினாலும் வேயப்பட்டிருந்தது. காணி 1 பரப்பு 6 குழி விஸ்திரணமுடையது. அத்துடன் ஆறு பவுண் நகையும் கொடுத்திருந்தார்கள். அக் காலத்திலும் நாம் வண்டியில் மூடை ஏற்றும் வேலையை செய்துகொண்டிருந்தோம். பருத்தித்துறை மொத்த வியாபாரி சரவணமுத்து அவர்களின் வியாபார ஸ்தலத்தில் மூடை ஏற்றுவது வழக்கம். மூடை ஏற்றும்போது அக்கணக்குகளை நாமே தயாரித்துக் கொடுப்பதால் அவர்கள் சாமானை உடனே ஏற்றி விடுவார்கள். நாம் அதனைக் கொண்டு வந்து கடைக்குப் பறிப்பது வழக்கம். எமது கணக்கின் திறமையைக் கண்ட அவர்கள் தங்களுக்குக் கணக்கெழுத ஒரு ஆள் தேவையென்றும், என்னை அத் தொழிலுக்கு வர முடியுமா என்றும் கேட்டார்கள். நாம் அதற்கு உடன்பட்டு 1944-ம் ஆண்டு அவரது வியாபார ஸ்தலத்தில் கணக்காளனாய் நாற்பது ரூபா சம்பளத்தில் சேர்ந்தோம். இரண்டு, மூன்று மாதங்களுக்குள் எமது செயற்பாட்டினைக் கண்ட அம்முதலாளி பணம் ஈறான சகல பொறுப்புக்களையும் எம்மிடமே ஒப்படைத்துள்ளார். கணக்கை மட்டும் பார்த்துக்கொள்ளுவார். அவரது மொத்த வியாபாரத்தில் கூப்பன் சாமான்கள் விநியோகம், சீமெந்து, ஓடு விற்பனை முதலிய வியாபாரங்களைச் செய்து வந்தார். 1948-ம் வருடமளவில் நெல் வியாபாரத்தையும் செய்யத் தொடங்கி, அதன் காரணமாக ஒரு மில்லை ஸ்தாபிக்க நினைத்து, அவ்வியாபார ஸ்தாபனமுள்ள அவரது நிலத்திலே கட்டடங்களை அமைத்து மில் தொழிலை ஆரம்பித்தார். இக்



காலத்தினுள் எமது குடும்பத்தினுள் இரண்டு, மூன்று பிள்ளைகள் பிறந்து இறந்துள்ளனர். எமது கடும் உழைப்புக் காரணமாக வியாபாரத் தாபனத்தில் தொழிலகத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு சிறு விகிதாசாரம் எமக்கு மேலதிகமாக தந்து வந்துள்ளார்கள். நாற்பது ரூபா சம்பளத்தில் சேர்ந்த எமக்கு வருடாந்தம் கூட்டிக் கூட்டி இக்காலத்தில் நூறு ரூபா சம்பளம் தந்தார்கள். தொழிற்தாபன வியாபாரங்கள், மில் தொழில் முதலியசகலவற்றின் கணக்கு, வழக்கு முதலிய சகல விசயங்களுக்கும் நாமே பொறுப்பாய் இருந்துள்ளோம். 37 குதிரை வலுவுள்ள டீசல் எண்ணெயில் ஓடும் இயந்திரத்தின் மூலமே மில்த் தொழில் நடைபெற்று வந்தது. இவ்வியந்திரத்தை செப்பனிடுவதற்கு திருத்துபவர்கள் வரும்போது நாம் அதையூன்றிக் கவனித்து வந்த காரணத்தினால் 1950-ம் வருடத்தின் பின் அவ்வியந்திரத்திலுள்ள திருத்த வேலைகள் சகலதும் எம்மாலே திருத்தம் செய்யப் பெற்று வந்துள்ளன. 30-10-1950 இல் அத்தாபன முதலாளியான சரவணமுத்து அவர்கள் அவரது குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவு காரணமாக கார் பற்றரிக்கு விடும் அசிற்றைக் குடித்து அகால மரணமானார். இந்நேரம் எமது குடும்பத்தில் சுப்பிரமணியன் என்னும் ஓர் மகன் பிறந்து இரண்டு வயதில் இறந்துள்ளான். இக்காலம் வேறு முதலாளிமார் எம்மைத் தம்முடன் வரும்படி கேட்டனர். அக் கடை முதலாளியின் பிள்ளைகளும் சிறுவர்களாய் இருந்த காரணத்தினால் அவர்கள் செய்த நன்றியை மறக்க முடியாது அவ்வியாபார தாபனத்தை நாமே நடாத்தி வந்தோம். மில் செயற்படுவதை நிற்பாட்டி விட்டார்கள். அவரது மூத்த மகனான சோமசுந்தரம் தனது படிப்புகளை நிற்பாட்டி மில் தொழிலைச் செய்ய முற்பட்டு 1955-ம் வருடமளவில் மில்லைச் செயற்படுத்த ஆரம்பித்தார்கள்.

30-01-1951 இல் எமக்கு விக்கினேஸ்வரன் என்னும் ஓர் மகன் பிறந்துள்ளார். 26-12-1954 இல் நிர்மலாதேவி என்னும் ஓர் பெண் குழந்தையும் பிறந்துள்ளா. எமது மனைவிக்கு உடல் நலக் குறைவு ஒரு நாளும் திருந்துவதில்லை. வீட்டில் எமக்குச் சாப்பாடுகள் சமைப்பது, இப்பிள்ளைகளைப் பராமரிப்பது போன்ற சகல வீட்டு வேலை

களையும் எமது சிறிய தாய்மார்களும், எமது சகோதரிகளுமே செய்து வந்தார்கள். மனைவியின் உடல் நலக் குறைவு காரணமாக எமது சிறியதாயார், சகோதரங்களின் உதவியையே நாம் நாடவேண்டி ஏற்பட்டது. அவர்களின் உதவியும் அடிக்கடி எந்த நாளுமே தேவைப்பட்டு வந்த காரணத்தினால் எமது மனைவிக்கும் அவர்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படுவதுண்டு. அவர்கள் சமையல் செய்ய வேண்டி இருந்ததால் சமையல் சாமான்களைக் கையாளுவதன் நிமித்தம் அச்சாமான்களில் தற்குறைவு ஏற்பட்டுள்ளதென எமது மனைவி கருதி, அடிக்கடி சண்டையிடுவதால் அவர்களும் கோபித்துக்கொண்டு போய் விடுவார்கள். பத்து, இருபது நாட்களுக்குள் மனைவிக்கு மீண்டும் உடல் நலக் குறைவு ஏற்பட்டுவிடும். அத்தருணம் நாம் அவர்களைக் கெஞ்சி மன்றாடி எமது வீட்டு வேலைகளைச் செய்விப்பது வழக்கமாய் இருந்தது. இக்காலங்களில் தொழிற்தானத்திலிருந்து மத்தியானம் வீட்டிற்குச் சாப்பிட வரும்போது தொழிற்தானத்தின் சைக்கிளையே பாவிப்பது வழக்கம். தொழிற்தானத்திலிருந்து எமது வீடு ஒரு மைல் தூரத்திலிருந்தது. சைக்கிளில் வந்து சாப்பிட்டுவிட்டு முப்பது, நாற்பது நிமிடங்களுக்குள் நாம் தொழிற்சாலைக்குத் திரும்பி விடுவோம். இவ்வாறு நடந்துகொண்டு வருகையில் எமது சிக்கன வாழ்க்கை காரணமாக காணிகளையும் வாங்கியிருந்தோம். மனைவிக்கும் ஒன்பது பவுண் நிறையில் தாலிக்கொடியும், வேறு பல நகைகளும் செய்து கொடுத்திருந்தோம்.

எமது சகோதரிக்கு 1948-ம் ஆண்டளவில் ஓர் சிறு காணியும் வாங்கிக் கொடுத்துக் கொஞ்ச நகைகளும் கொடுத்து விவாகம் செய்து வைத்திருந்தோம். பிற்பாடு அடுத்த சிறியதாயாரின் மூத்த மகளுக்கும் 1954-ம் ஆண்டளவில் சிறிது நகைகளும், காசும் கொடுத்து விவாகத்தைச் செய்து கொடுத்தோம். சகோதரிகளின் விவாகம் செய்த செயல்கள் எமது மனைவிக்குப் பிடித்ததாய் அமையவில்லை. இக் காரணங்களினால் எமது மனைவிக்கும், எமக்கும், சகோதரங்களுக்குமிடையில் நீங்காத மனக்கசப்புடனே வாழ்ந்து வந்தோம். இக்காலத்தில் மனைவியின் வீட்டை சிறிது சிறிதாய் திருத்தி கல்வீடாக்கினோம்.



08 – 12 – 1956 இல் இராஜேஸ்வரி என்னும் இரண்டாவது மகள் பிறந்துள்ளா. இக் காலங்களில் வேண்டிய காணிகளில் சில மனைவியின் பெயரிலும், மகன் பெயரிலும் வாங்கப் பெற்றன. அக்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் நெல்லை மில்லில் கொடுத்து கூலிக்குக் குற்றுவித்து வந்தார்கள். எமது மில்லுக்கும் அவ்வாறான வேலை அரசாங்கத்தினால் கொடுக்கப்பெற்றது. 1958, 1959-ம் ஆண்டளவில் அரசாங்கம் தரும் நெல்லை குற்றிக் கொடுக்கும் தன்மைக்காக கடும் உடல் உழைப்புச் செய்யவேண்டி ஏற்பட்டது. வெளியிலுள்ள வேலைகளை உரிமையாளர் செய்து தருவார்கள். மில்லிலுள்ள கணக்கு எழுதுதல், இயந்திரம் திருத்துதல், அரசாங்கத்திடமிருந்து நெல்லை வாங்குதல், அரசாங்கத்திற்கு அரிசியைக் கொடுத்தல், அதற்கான வாகன வசதிகளை ஒழுங்கு செய்தல், ஊழியர்கள் நியமித்தல் போன்ற சகல வேலைகளையும் நாமே செய்து வந்தோம். இத் தேவைகளுக்காக இருபத்தி நான்கு மணித்தியாலமும் செயற்பட வேண்டி ஏற்பட்டது. 1956-ம் ஆண்டிலிருந்து மில் தொழிலால் கிடைக்கும் வருமானத்தில் 1/5 பங்கு எமக்குக் கிடைக்கப் பெற்றது. உள்ளூரில் காசு தேவைப்படுபவர்களுக்கு பொறுப்புடன் காசு கொடுத்து வாங்குவது வழக்கம். இக்காலத்தில் எம்மிடம் முன்னூறு பவுண் பெறுமதியான முப்பதினாயிரம் ரூபா வரையில் இருந்தது.

(மிகுதி வளரும்)

★ சிறுவயதில் பயின்ற தமிழ் மொழியின் செய்நன்றியை மறவோம்.

★ ஞானம் வளர்த்த தமிழ் மொழி வளர உள்ளத்தை நெறிப்படுத்துவோம்.

★ எம்மை ஆளாக்கிய தமிழ் மொழியின் அறநெறியை, எம் ஆன்மா ஒளியில் சேரும்வரை நினைந்து நினைந்து கண்ணீர் உருகுவோம்.

ம—

# மூல வியாதி

இலங்கை போன்ற வெப்பவலய நாடுகளில் காணப்படும் பொதுவான உபத்திரவம் தருகின்ற நோய்களில் மூல வியாதியும் ஒன்றாகும்.

மூலம் என்பது மலத்துவாரத்தின் வெளிப்புறத்தில் அல்லது உட்புறத்தில் வீங்கிய உள் நாளங்களில் அல்லது வெளி நாளங்களில் சிறு சுண்டைக்காயளவு வீங்கியிருக்கும் இரத்தச் சேர்க்கைக் கட்டிகளாகும். இக்கட்டிகள் பவுத்திரக் கட்டிகள் அல்லது மூல முளைகள் என அழைக்கப்படும். இவை சிறு பட்டாணிக் கடலை அளவிலிருந்து நெல்லிக்காய் அளவுவரை அமைந்திருக்கலாம். மேலும் இந்நோயில் மலத்துவாரத்தின் உட்பாகத்தில் இருக்கும் மெல்லிய சளிச் சவ்வுகள் பருத்துக் காணப்படுகின்றன. இதன் காரணமாக கடுமையான குத்தல் வலி ஏற்படுகின்றது.

மூலம் பிரதானமாக இரண்டு வகைப்படுத்தப்படும்.

(1) வெளி மூலம்.

(2) உள் மூலம்.

வெளி மூலம் என்பது மலவாயின் வெளிப்புறத்தில் இருக்கும் மூல முளைகளாகும். இது சளிச்சவ்வுப் படைக்கும் வெளியேயும், தோலுக்கும் இடையில் காணப்படும். இது குத வாயைச் சுற்றி உறைந்த இரத்தம் கொண்ட வீக்கம் ஆகும். இது அநேகமாக குதவழியின் நடு மூன்றில் ஒரு பங்கிற்கு கீழாக காணப்படும். இதில் அதிகளவு குருதிக்கசிவு இராது. ஆனால் அதிகளவு நோ இருக்கும். உள்மூலம் என்பது மல வாயின் உட்புறத்தில் காணப்படும். இது சளியப்படைக்கும் சளியச் சவ்வுக் கீழ்ப்படைக்கும் இடையேயுள்ள விரிந்த குத நாள வளைவினால் உருவாகிறது. இது அநேகமாக குதவழியின் நடுமூன்றில் ஒரு பங்கிற்கு மேலாக காணப்படும். இதில் மலம் கழித்த பின் அதிகளவு குருதிக் கசிவு ஏற்படலாம். இவ்வாறு இரத்த கசிவை ஏற்படுத்துவது இரத்தக் கசிவுள்ள மூலவியாதி எனப்படும். இரத்தக் கசிவை ஏற்படுத்தாதது இரத்தக் கசிவற்ற மூலவியாதி எனப்படும்.



இவ் வியாதி கடுமையற்ற நிலையிலிருந்து கடுமையான நிலைவரை காணப்படுகிறது. இது மூலம் மலத் துவாரத்திலிருந்து வெளியில் தள்ளிய நிலையைப் பொறுத்திருக்கும். இது மூன்று நிலைகளில் காணப்படுகின்றது.

1. முதலாவது நிலை: இதில் மூலம் மலம் கழிக்கும் போது குதத் துவாரத்திற்கு வெளியே தள்ளிக் காணப்படும். மலம் கழித்தபின் தன் பழைய நிலையை அடையும்.

2. இரண்டாவது நிலை: இதில் மூலம் மலங்கழிக்கும் போது குதத் துவாரத்திற்கு வெளியே வெளித்தள்ளப்படும். ஆனால் மலம் கழித்த பின்பு பழைய நிலையை தானாக அடையாது. கையினால் ஆக தள்ளிவிட வேண்டும்.

3. மூன்றாவது நிலை: இதில் மூலம் வெளித்தள்ளிய நிலை நிலையானதாக காணப்படும். மீண்டும் உள்ளே செல்லாது. இது அசௌகரிய உணர்ச்சியையும், குதத் துவாரத்திற்கு வெளியே ஈரத் தன்மையையும் ஏற்படுத்தும்.

இந் நோயினால் பீடிக்கப்பட்டவர்களது உடல் நலம் குன்றிக் காணப்படுவதுடன், மனமும் குழப்பம் அடைந்து காணப்படும். இதன் நிமித்தம் இவர்கள் அடிக்கடி கோபப் படுவார்கள்.

அறிகுறிகள் :-

ஆரம்ப நிலையில் குதத்துவாரத்தின் உட்பக்கமாகவுள்ள சவ்வில் சிறு வீக்கங்கள் தோன்றுகின்றன. இச் சிறு வீக்கங்கள் பருக்கும்போது மலம் கழிக்கும் நேரத்தில் அவை வெளியே தள்ளும். மலம் கழித்தபின் இவை உள்ளே செல்லும். சிலருக்கு உள்ளே தள்ளிவிடவேண்டி இருக்கும். சிலரில் உள்ளே தள்ளினாலும் போகாது. இவற்றில் அழற்சியும், புண்ணும் ஏற்படலாம்.

மலங்கழிக்கும்போது இரத்தக் கசிவு ஏற்படலாம். மூலத்தால் அதிக இரத்த இழப்பு ஏற்பட்டால் சோகை ஏற்படலாம். மலங்கழித்த பின் நோ, எரிச்சல், சொறி போன்ற உணர்வுகள் இருக்கும்.

நிற்கையிலோ, நடக்கையிலோகூட மூலம் வெளியே தள்ளப்படலாம்.

காரணங்கள் :-

★ மலச்சிக்கலும் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட குடல் நோய்களுமே முதலான காரணங்கள் ஆகும்.

★ மலச்சிக்கலுக்குட்பட்ட மலத்தை முக்கி வெளியேற்றுதல்.

★ மலச்சிக்கலால் ஏற்படும் இரத்த தேக்கம்.

★ மலச்சிக்கலை நீக்க நீர்மலம் போக்கிகளைப் பாவிப்பதனால் இவை குதப் போர்வையில் மிருதுவாக்கத்தை ஏற்படுத்துவதன் நிமித்தம் நாளங்கள் புடைக்க ஏதுவாகின்றது.

★ எழுந்து நடக்காமல் வெகுநேரம் ஓரிடத்தில் உட்கார்ந்து வேலை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு.

★ சூடான பரப்பில் தொடர்ந்து உட்கார்ந்து வேலை செய்பவர்கட்கு (உ + ம்) முற்பக்கம் இயந்திரம் பொருத்தப்பட்ட வாகன சாரதிகள்.

★ இதயநோய் உள்ளவர்கள் மற்றும் மனநோய் உள்ளவர்கட்கு.

★ மதுபானம், மற்றும் வேறு காரணங்களால் ஈரலிலுள்ள இரத்த நாளங்கள் தடைப்பட ஏதுவாகின்றது. இதனால் மேற்குத நாளக்குருதி, வாயி நாளத்தை அடைய முடியாமற் தேங்குகின்றது.

★ கர்ப்பகாலத்தில் கீழ்ப் பெருநாளம் அழுத்தப்படுவதன் காரணமாக கீழ்க்குத நாளக் குருதி செல்வது தடைப்பட்டு குருதித் தேக்கம் ஏற்படுகின்றது. மேலும் இக்காலத்தில் புறோஜெஸ்திரோன் என்னும் ஓமோனின் அளவு கூடிக் காணப்பட்டு குருதிக் குழாய்களை விரிவடையச் செய்கின்றது. இதனால் நாளக்குருதி செல்வது குறைந்து தேக்கமேற்பட வாய்ப்பேற்படுகின்றது. இதனால் ஏற்படும் மூலவியாதி பிரசவத்தின்பின் தணிந்து விடுகின்றது.

★ குதப்புற்று நோயில் கட்டிகள் தோன்றி நாளங்களில் தடையை ஏற்படுத்திக் குருதியைத் தேக்கமடையச் செய்கின்றது.

★ இடுப்புக் குழியில் உள்ள உறுப்புகளில் கட்டிகள் ஏதாவது ஏற்பட்டால்,

★ முன்னிற்கும் சுரப்பியின் பெரிதாக்கம், சிறுநீர் வழியில் ஏற்படும் சுருக்கம் ஆகியவை காரணமாக சிறுநீரை முக்கி வெளியேற்றும் போது தசைச் சுருக்கங்கள் ஏற்பட்டு நாளங்கள் குதவழிச் சுவருடன் அமத்தப்படுகின்றது.



★ உடல் அமைப்பியல் ரீதியான காரணங்களாக புலியீர்ப்புக் காரணமாக குருதித் தேக்கம் சளிச்சவ்வின் கீழ் அடுத்தாற்போல் நாளவலைகள் காணப்படுதல், வாயினாளத்தில் வால்வுகள் காணப்படாமை குத நாதங்களைச் சுற்றி மெல்லிய தொடுப்பிழையங்கள் காணப்படுவதால் இலகுவில் அழுத்தப்படக்கூடியதாய் இருத்தல் போன்றன காணப்படுகின்றன.

விகற்பங்கள் :

★ அதிகளவு குருதி இழப்பு ஏற்படின் குருதிச் சோகையை ஏற்படுத்தும்.

★ மூல முளையில் முறுகல் ஏற்பட்டு குருதி செல்வதில் தடை ஏற்படுவதன் காரணமாக அழுகல் நிலை ஏற்படுகின்றது. இதனைத் தொடர்ந்த நிலையில் புண் ஏற்படலாம்.

★ குதத் துவாரத்திற்கும், குதவழிக்குமிடையே கட்டு ஏற்பட்டு அது உடைப்பதன் காரணமாக பவுந்திரம் ஏற்படுகின்றது.

சிகிச்சை ;

மலச்சிக்கலே முதலான காரணியாக இருப்பதால் இதனைத் தவிர்ப்பதில் கூடிய கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

மலச்சிக்கலை தவிர்ப்பதற்கு

★ ஒவ்வொரு சாப்பாட்டு இடைவேளையின் போதும் தாராளமாக நீர் அருந்துதல், மோர் கிடைக்கப்பெற்றால் மோரைப் பாவித்தலே சாலச் சிறந்தது.

★ மிருதுவான மலத்தை உறுதி செய்யக்கூடிய உணவு முறைகளை கையாளல், இதற்குத் தினமும் பப்பாசிப் பழம், கதலி, இதரை வாழைப்பழங்கள் போன்ற பழவகைகள், பொன்னாங்காணி, கீரை, வட்டத்துத்தி இலை போன்ற நார்த்தன்மை வாய்ந்த பச்சைக் காய்கறிகள், கோகிலாக் கிழங்கு, கருணைக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகள் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுதல், பருப்பு முதலானவற்றைத் தவிர்த்தல்.

★ தினந்தோறும் வசதியான ஓர் குறிப்பிட்ட நேரத்தை மலம் கழிப்பதற்கெனப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல்.

★ மலம் கழிக்கும்போது அவசரப்படாமல் கடமை மன தோடும், முழு அளவு மலத்தையும் கழித்துக் கொள் ளுதல்.

★ தினந்தோறும் ஓரளவு உடற்பயிற்சி செய்தல்.

★ எந்த வகையான மலப் போக்கினையும் மலம் கழிப் பதற்கு பழக்கப்படுவதற்கு பழக்கப்படுத்திக் கொள்ளா திருத்தல்.

★ உணர்ச்சிவசப்படுதல், நித்திரை கொள்ளாதிருத்தல் போன்றவற்றைத் தவிர்த்தல்.

மேலும் இந்நோயினால் பிடிக்கப்பட்டவர்கள், நோயை ஏற்படுத்திய காரணியிலிருந்து விலக்கி நடக்க வேண்டும். சூடான பரப்பில் தொடர்ந்து உட்கார்ந்து வேலைசெய்யும் வாகனச் சாரதிகள் போன்றோர் அவ்வேலையிலிருந்து ஓய்வு பெறுவது நலம். தொடர்ந்து உட்கார்ந்து வேலை செய்ப வர்கள் இடையிடையே எழுந்துநடந்து சிறு பயிற்சி எடுக்க லாம். கோழி இறைச்சி போன்ற சூடான உணவுப் பொருட் கள், மதுபானம் போன்ற குடிவகைகள், மிளகு, கராம்பு, மிளகாய் மற்றும் மிதமிஞ்சிய காரவகைகள் முதலியவற்றை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும். ஆமை இறைச்சியை உணவில் சேர்த்தல் நன்மை பயக்கும்.

மூலத்தில் ஏற்படும் நோவைக் குறைப்பதற்கு வெளிப் பிரயோகமாகக் கடுக்காய்த் தூளை பசைபோற் செய்து அதனுடன் அபினையும் கலந்து களிம்பாக்கி மூல முளை யில் பூச சுகமாகும். குக்கில் வெண்ணெயும் வேதனா சாந்தியைக் கொடுக்கும்.

மான்கொம்பை அரத்தால் அராவியதூள், பாற் சாம் பிராணி இரண்டையும் வெவ்வேறாக பட்டுச் சீலையில் அரித்து இரண்டையும் சமபங்காக எடுத்து நெய்விட்டுக் குழைத்து பூச சுகம் கிடைக்கும்.



வெளி மூலத்திற்கு வட்டத்துத்தி இலை, ஆமணக்கு இலை, எருக்கலை மூன்றையும் குறுக அரிந்து நெய்யில் வதக்கி மூலத்தில் வைத்துக் கட்ட நிவாரணம் கிடைக்கும்.

உட்பிரயோகமாக கருணைக்கிழங்கு, கோகிலாகிழங்கு, கடுக்காய், சிறுநாகம் பூ, செந்நாயுருவி, பவளமல்லிகை, சேரங்கொட்டை, ஆமையோட்டு பஸ்பம் போன்றவைகளை ஏதோ ஒரு வகையில் உள் எடுத்தல் மிகுந்த நிவாரணம் கொடுக்கும்.

பவளமல்லிகைப் பூ குடிநீரை அரைக் கோப்பை வீதம் தினம் இருவேளை கொடுப்பது இரத்த மூலத்திற்கு சிறந்த நிவாரணம் கொடுக்கும்.

சாத்தாவாரிக் கஷாயத்தை அரைக் கோப்பை வீதம் தினமும் இருவேளை கொடுக்க மூலத்தால் ஏற்படும் எரி வும் நோவும் நீங்கும்.

சாத்தாவாரிக் கஷாயத்தை தயாரிக்க தண்ணீர்விட் டான் கிழங்கு, நன்னாரி, வெண்சந்தணம், இலாமிச்சை, இருவேலி திராட்சை, மஞ்சிஷ்டி, நீலோற்பலம், அதிமது ரம், முளைக்கிரை ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

நாட்பட்ட மூலவியாதிக்கு ஆமையோட்டு பஸ்பத்தை 1 கிராம் வீதம் தினம் இருவேளை தேசிப்பழச் சாற்றில் கொடுத்தல் சிறந்த பலனைக் கொடுக்கும்.

மேலும் உட்பிரயோகமாக எள்ளு 500 கிராம், வெந் தயம் 100 கிராம், நற்சீரகம் 100 கிராம், பனங்கட்டி இவற்றை சேர்த்து இடித்து எள்ளுப் பாகாக்கி தினம் இரு வேளை பாக்களவு கொடுக்க சிறந்த நிவாரணம் கிடைக்கும்.

ஆகவே மூல வியாதிக்கான காரணங்களையும், அத னுடைய இலட்சணங்களையும் அறிவது மட்டுமல்லாமல் அதற்கு இலகுவான, வீட்டிலேயே செய்யக்கூடிய சிகிச்சை முறைகளையும் அறிந்திருத்தல் மிகுந்த நன்மை பயக்கும். இவ்விடத்தில் நாம் கவலையீனமாக அல்லது புறக்கணித்து நடப்போமேயானால் அது சத்திரசிகிச்சைக்கு வழிகோலு வது மட்டுமல்லாமல் உயிருக்கு ஆபத்தும் விளைவிக்கலாம்.

உ

# இறந்தபின் எங்கு செல்கிறோம்

என்ற நூலில்

அ. குமரகுரு அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

மக்கள் மறுபிறப்பிலும் மக்களாகவே பிறப்பார்கள் எனக் கூறமுடியாது. இதனை அச்சு மாறியும் பிறக்கும் எனச் சைவசித்தாந்தம் கூறும். அகல்யா கல்லானதும், சிலந்தி சோழ மன்னனானதும், எலி மாவலியானதும் ஆகிய இவையே அதன் திருஷ்டாந்தம் என்பர். இறப்பைப் பற்றிய மர்மங்களை நாம் அறிந்திருந்தால் இறப்பு என்பது பயங்கரமான ஒரு நிகழ்ச்சியல்ல என்ற தெளிவு ஏற்பட்டு விடுகிறது. தன்னம்பிக்கையோடு சாவை எதிர்கொள்ளும் ஒரு மனப்பாங்கு வந்துவிடுகிறது. நாம் புரிந்த கர்மவினைகளிலிருந்துதான் நாம் இறந்தபின் எமது எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது என்னும் உண்மை எமக்குப் புலனாகி விடுகிறது. நன்னெறிகளைக் கடைப்பிடித்து சிரான வாழ்வு வாழ வேண்டுமென்ற நன்நோக்கம் மேலோங்குகிறது. பந்த பாசங்கள் எல்லாம் வெறும் மருட்சிகள் என்று உணர முடிகிறது. பிறவிகள் தோறும் நாம் பந்தத் தொடர்பு கொண்டிருந்த உறவுகள் ஒன்றல்ல இரண்டல்ல. எத்தனை எத்தனையோ என்பது புரிகிறது.

மூவாயிரம் வருடங்களிற்கு முன்னர் சாங்கியம் என்னும் தத்துவ விளக்கத்தை உலகுக்கு அளித்த கபில முனிவர் அண்டத்தைப் பற்றிக் கூறிய உண்மைகளைத் தான இன்றைய விஞ்ஞானிகள் பலவித ஆராய்ச்சிகளின் பின்னர் கண்டுபிடித்து வெளியிடுகிறார்கள்.

கண்ணுக்குத் தெரியாத காற்றும், மின்சாரமும் இருப்பதை நம்பும் எமது பகுத்தறிவு இப் பூவுலகைவிட வேறு உலகங்களும் எமது கண்களுக்குப் புலனாகாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை ஏற்கத் தயங்குகின்றது. சூட்சுமமாக இருக்கும் காற்றும், மின்சாரமும், காந்தமும் எமது கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அவைகளையும் எம்மால் உணர முடிகிறது. சூட்சும உலகத்தை நுண்



நோக்காற்றல் உடையவர்களைத் தவிர வேறெவராலும் பார்க்கவோ உணரவோ முடியாது. சூட்சும உலகம் சட உலகத்தோடு ஊடுருவிக் கொண்டு இணைந்திருக்கிறது. ஆனால் அது மிக நுட்பமான பரிமாணத்தை உடையதாகையால் சூட்சுமமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. சட உலகின் கண்களுக்கு அது தெரிவதில்லை.

இயற்கையின் சக்திகள் அனைத்திற்கும் மூலமாக விளங்குவது பிராணன். பிராணன் இன்றேல் இயக்கமில்லை. சீவராசிகளின் உடல்களில் உயிர் தரித்திருப்பதும், நெருப்பு எரிவதும், காற்று வீசுவதும், ஆறுகள் ஓடுவதும், சமுத்திரத்தில் அலைகள் அடிப்பதும் எல்லாம் இந்தப் பிராணனினால்த்தான் நிகழ்கின்றது. சூட்சும சரீரம் மனிதனின் ஸ்தூல சரீரத்தைச் சுற்றி இயங்குகிறது. இதில் மனிதனின் உணர்ச்சிகள், ஆசைகள், எண்ணக் கிளர்ச்சிகள் எல்லாம் அவைக்குரிய நிறங்களில் பிரதிபலிக்கின்றன.

எமது கர்ம வினைக்கேற்ப எமது குணச் சிறப்புகள், உணர்வுகள், மனப்பாங்குகள், மனோசக்திகள் எல்லாம் அமைந்துவிடுகின்றன. நாம் புகவேண்டிய கற்பாயசமூம் எமது கர்மவினைக் கேற்பவே நிர்ணயிக்கப்படுகிறது.

தேசங்களும், மனித இனங்களும் இயற்கையினாலும், மனித செயற்பாடுகளினாலும் அனுபவிக்கும் இன்ப, துன்பங்கள் யாவற்றுக்கும் கரும வினையே அடிப்படையாக உள்ளது. ஒவ்வொரு ஆன்மாவும் பிறக்கின்ற நாடு, இனம், குடும்பம் எல்லாம் அவனுடைய கர்மவினைக் கேற்பவே நிர்ணயிக்கப்படுகின்றது.

நாம் எம்மைப் பார்த்துக் கொள்வதெல்லாம் அழிந்து போகும் எமது உடலின் கோணத்திலிருந்தேயொழிய அழிவற்ற ஆத்மாவின் நோக்கிலல்ல. ஆகையினால்தான் உடலோடு இணைந்த உணர்ச்சிகளிலிருந்து பிறந்த இன்பங்கள் எம்மைச் சிறிது நேரம் மகிழ்விப்பதையும், துன்பங்கள் எம்மை வாட்டுவதையும் பெரிதுபடுத்தி வாழ்க்கை என்றால் இப்படித்தான் என்று நினைத்து விடுகிறோம்.

ை—

# மதம், சமயம் என்னும் பதங்கள் உணர்த்திய உண்மைகள் என்ன?

*(சித்திரை மாத இதழ் தொடர்ச்சி .....)*

### எமது சமய வரலாற்றிலுள்ள தீபாவளித் தின வேண்டுதல் பற்றிய விளக்கம்

எமது சைவசமயத்திலே தீபாவளி நாளை ஓர் அறப்பணி நாளாக நியமித்து உள்ளார்கள். நரகாசுரன் என்ற ஓர் அசுரன் இப்பூவுலகிற் பிறந்து எண்ணிலடங்கா ,பல கோடி வருடங்கள் வாழ்ந்து நன்மை என்ற வார்த்தைக்கு விளக்கமே தெரியாது சகல உயிரினங்களுக்கும் எவ்வளவு கொடுமை செய்ய முடியுமோ அவ்வளவு கொடுமைகளையும் செய்துள்ளான். இவை பற்றி எமது சிந்தனையில் அவன் செய்த சித்திரவதைகளையோ. கொடுமைகளையோ கணக்கிட முடியாதவாறு அமைந்துள்ளதைக் காணுகிறோம். இக் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் மனிதர்களாகிய சகல ஆன்மாக்களும் இவனது தாங்க முடியாத கொடுமை காரணமாக இந் நரகாசுரனை அழித்து தாங்கள் படும் வேதனையை நீக்கியருளும்படி இறைவனைப் பலவிதத்திலும் வேண்டுகிறார்கள். எந்த ஒரு ஆன்மாவும் பலமுறை வேண்டும்போது இரக்கமில்லாத ஒருவராக இருந்தாலும் சிறிதளவாகுதல் இரங்குவது இயற்கை. இதன் பிரகாரம் இறைவன் இந்நரகாசுரனை அழிப்பதற்குரிய எண்ணத்தைத் தனது சிந்தனையில் கொண்டு இந்நரகாசுரனை அழிக்கிறான்.

நரகாசுரனை அழித்த இறைவன் எவ்வாறு நரகாசுரனை அழித்தான் என்பதை ஆராயுமிடத்து நரகாசுரனது கொடுங்கோன்மை எண்ணத்துக்கு அவனது ஐந்துபூத விகிதாசாரத்திலுள்ள ஆசைப் பொருளான நீர்ப் பூதத்தின், கூடுதலான விகிதாசாரமே காரணமாகிறது. எந்த ஒருவனுக்கும் அளவுக்கு மீறின ஆசை கூடினால் சுகமான வாழ்வை விரும்பி தனது சுயநலத் தேவைக்காக எவ்வித தவறைச் செய்யவும் பின்வாங்க மாட்டான். இந்த நரகாசுரனுக்கு நீர்ப்பூத விகிதாசாரம் அளவுக்கு மீறி ஏராளமாக இருந்த தன்மையால் சொல்ல முடியாத அளவு கொடுமைகளைச் செய்துள்ளான்.



ஆகவே இந்நீர்ப்பூத விகிதாசாரத்தை அழிப்பதற்கு ஒளிப்பூத விகிதாசாரம் ஏராளமாகக் கூடிய ஒருவராலேயே முடியும். இறைவன் என இங்கு நாம் குறிப்பிடுவது ஒளிப்பூத விகிதாசாரத்தையே. ஒளிப்பூதத்தினாலன்றி வேறு எவ்வகையாலும் நீர்ப்பூதத்தை அழிக்க முடியாதென்பதை விளங்கிக் கொண்டோம்

நரகாசுரனின் உயிர்பிரியும் கடைசி நேரத்தில் தான் இவ்வளவு காலமும் செய்த அட்டூழியங்களைச் சிந்தனையில் கொள்ளுகிறான். இப்போதுதான். தான் இவ்வளவு காலமும் செய்தது அட்டூழியம் எனவும். இந்த அட்டூழியத்தை நிவர்த்திக்க மாற்று மருந்து கிடையாதெனவும் அவனுக்கு விளங்குகிறது. இறுதியாக இறைவனிடம் மன்றாடி ஓர் வேண்டுகோள் விடுகிறான்.

எனது உயிர் பிரியும் இன்றைய தினத்திலே சகல சீவராசிகளும் புனித நீராடி, புத்தாடை உடுத்து. அவ்விதம் செய்ய வழியின்றி கஷ்டப்படும் ஏழைகளுக்கும் புத்தாடை கொடுத்து. உணவு வகைகளையும் கொடுத்து அவர்களது ஐந்துபூத விகிதாசாரத்திலுள்ள எண்ணத்தை நல்லெண்ணமாக்கி செயற்படுமாறு இருகரங் கூப்பி வேண்டுகிறான். அவனது உயிர் பிரிந்து இன்று பல்லாயிரம் வருடங்களாய் விட்டன. எமது சைவசமயத்தில் இதை ஒரு முக்கிய செயற்பாடாக அக்காலத்திலிருந்து இன்று வரையும் எழுதிக்கொண்டேயிருக்கின்றார்கள். எப்புராண வரலாறை எடுத்தாலென்ன நாயன்மார்களின் வரலாறை எடுத்தாலென்ன இதை ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதி செயற்பட்டு வந்திருக்கிறார்கள். இங்கே நாம் எமது சிந்தனையை வளர விடுகிறோம். உண்மையை அறிவதற்காக உள்ளத்தைக் குடைகிறோம். இன்றைக்கு சில நூற்றாண்டுகளின் முன் ஆலயங்களில் உயிர்ப் பலி கொடுப்பதை முக்கியமாகக் கருதி செயற்பட்டு வந்திருக்கிறார்கள். நாகரீகம் இல்லாத காட்டு வாழ் மக்களிடையே அநாதி காலத்தில் மங்கையரை இறைவனுக்கு பலி கொடுத்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவை மிகப் பெரும் அறிவீனம் என்பதை விளங்கி இன்று சிலர் கைவிட்டுள்ளனர். ஆனால் இந்த 1950 ம் வருடங்களின் பின் தீபாவளித் தினத்தன்று ஆடு. மாடு. கோழி முதலியனவற்றைப் பலி கொடுக்காத கிராமமே இல்லையென்பதை அறுதியிட்டுக் கூறலாம். இவற்றால் மனிதன் அடையும் ஐந்துபூத விகிதாசார மாற்றத்தை எவராலும் அறிய முடியாது. இம் மக்களெல்லாம் ஐந்து பூத விகிதாசார மாறுபாடு காரணமாக விஷ சந்துக்களாகவும், மிருகங்களாகவும் பிறப்பு எடுப்பார்கள் என்பது முற்றிலும் உண்மையே.

விஷசந்துக்கள் ஒளியும் நல்ல காற்றும் உள்ள இடங்களில் வாழ முடியாது. ஆகவே எமது ஆன்மா தகாத எண்ணங்களைக்கொண்டு செயற்படுமிடத்து ஒளி, காற்று விகிதாசாரங்கள் ஏராளமான அணுக்கணக்கில் குறைகின்றன. அவ்வாறு குறைந்ந ஆன்மா ஒளியையும் சுத்தமான காற்றையும் விரும்பாத விஷசந்துக்களாகப் பிறப்பு எடுப்பார்கள் என்பதை நாம் ஊகிக்க முடிகின்றது. இதை இனி வருங்காலங்களிலாவது தீபாவளித் திருநாளை அசுரன் வேண்டிய முறையில் கொண்டாட முடியாவிடில் எமது சமயத்திலுள்ள வரலாற்று நாட்களிலிருந்து இத் தீபாவளித் திருநாளை நீக்கிவிடுவது சகல ஆன்மாக்களுக்கும் நன்மை பயக்குமென உறுதியாகக் கூறுகிறோம்.

இன்றைய நாட்களிலே பாத யாத்திரை என்றும், கும்பாபிஷேகம் என்றும், திருவிழா நாட்கள் என்றும், அபிஷேக தினங்கள் என்றும் சைவசமயத்தில் மன்றங்களை உருவாக்கியும், சங்கங்களை உருவாக்கியும், தேவஸ்தானங்களை உருவாக்கியும் எத்தனையோ வகைகளில் நாட்டு மக்களின் பரிதாப நிலையை நீக்குவதற்காக எத்தனையோ விதமான வேண்டுதல்களைச் செய்து வருகிறார்கள். இவைகள் முழுவதும் சமயஒழுங்குக்கு உட்பட்டவைதானா? அப்படி உட்பட்டவையாக இருந்தால் இன்றைய மக்களின் பரிதாப நிலை நீங்காமைக்குக் காரணம் என்ன? கொழும்பிலேயுள்ள பல ஆலயங்களிலும் ஜனாதிபதியின் ஆயுளுக்காகவும், அவரது கஷ்டத்தை நீக்கவேண்டியும் எமது சைவ குருக்கள்மார் எவ்வளவோ வகையான கிரியைகள் எல்லாம் சைவ ஆலயங்களில் செய்கிறார்கள். ஆனால் இவைகளில் ஒன்றுதானும் நிறைவேற முடிகிறதா? காலை 6 மணிக்குச் சொல்லும் ஒரு வேண்டுகோள் 10 மணியானதும் வேறு வேண்டுகோளாக மாறுகிறது. இவைகள் எல்லாவற்றையும் எமது உள்ளத்தைக் குடைந்து குடைந்து ஆராய்கிறோம். ஆனால் இவற்றால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பது எமக்கு நல்லாய் விளங்குகிறது. ஆனால் உயர்பீடத்திலுள்ள குருக்கள்மாருக்கோ, அரசியல்வாதிகளுக்கோ ஏன் இது விளங்கவில்லை? விளங்கவில்லை என்று சொல்வது ஏமாற்று வேலையேயன்றி வேறொன்றுமல்ல.

இன்று ஏட்டிக்குப் போட்டியாக எல்லா இடங்களிலும் பாதயாத்திரை நடப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஒளிப்பூதம் கூடிய எந்தவொரு ஆன்மாவாக இருந்தாலும் இம் முயற்சிக்கு ஒத்துப்போக முடியாது.



ள —

# நெறிதவறாத அறத்தின் மேன்மையும்; நேர்முகமாக உணர்த்துகின்ற அர்த்தங்களும்!

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

அறம் என்ற மூன்றெழுத்தான தமிழ்ச்சொல் மிக மிக முக்கியமாகக் கருதப்பட வேண்டிய ஒன்றாகும். எமது பிறப்பின் ஆரம்பம் ஐந்து பூத சேர்க்கைகளின் அறநெறிச் செயற்பாடேயாகும். இந்த அறத்தின் தன்மையை விளக்குவதாயிருந்தால் எழுத எழுத முடியாத ஒரு விஷயமாகவே அமையும். ஆகவே இதைப்பற்றி முற்று முழுதாக எழுதுவதென்பது இயலாத காரியம். முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி. அவனுக்கு அந்த எண்ணம் எவ்வாறு உருவானது என்பதை நோக்குமிடத்து ஒளிப்பூதம் கூடிய சிந்தனையே காரணமாய் அமைகின்றது. ஒருவருக்கு இரக்க சிந்தனை கூடுதலாய் அமைய வேண்டுமானால் அவரது ஐந்து பூத விகிதாசாரத்தில் ஒளிப்பூகம் கூடுதலாய் அமைந்திருக்க வேண்டும். காற்றைச் சுத்தம் செய்யும் ஒளிப்பூதம் கூடுதலாக இல்லாவிட்டால் காற்று சுத்தமடைய மாட்டாது. காற்று பூரண சுத்தமாய் இல்லாது போனால் நீர்ப் பூதத்தில் அழுக்கான கிருமிகள் உற்பத்தியாகவே செய்யும். ஒளிப்பூதம் படாத காற்றுப் பூதத்துக்கு ஒளிப்பூதம் சேர்மானமடைவது மிக முக்கியம். அழுக்கான கிருமிகள் உற்பத்தியாகுமிடத்து அவனது சிந்தனையில் இரக்கம் உற்பத்தியாக மாட்டாது. ஆகவே பாரியினது ஐந்து பூத விகிதாசாரத்தில் ஞான ஒளிப்பூதம் கூடுதலாய் அமைந்துள்ளதை சரியென உணர்ந்து கொண்டோம்.

அடுத்து மனுநீதிகண்ட சோழனது மகன் வீதியிலே தேரோட்டும் போது ஒரு பசுக்கன்று அடிபட்டு இறந்து விடுகின்றது. தாய்ப் பசுவானது அரச சபையிலுள்ள ஆராய்ச்சி மணியைத் தனது கொம்பினால் இழுத்து அடிக்கிறது. இதுகாலவரையில் அவனது அரசாட்சியில் என்றுமே அடிக்காத மணி இன்று அடித்த சத்தம் கேட்டதும் சோழன் தனது அறவழி ஆட்சி அழிந்ததென மிகுந்த

கவலையோடு இம்மணி அடித்த செயலை விசாரிக்கிறான். அப்போது சோழன் மகனது தேர்ச்சில்லில் அடிபட்ட கன்றினது தாய்ப்பசு இம் மணியை அடித்ததென அறிந்து கொள்கிறான். ஆனாலும் தனது அறவழி ஆட்சி கெட்டுவிட்டதென்ற மனநிலையில் என்ன செய்யலாம் என்பதை மிகுந்த கவலையோடு சிந்திக்கிறான். இறந்துபோன கன்றுக்காக எவ்வித பரிகாரமும் செய்யமுடியாது. ஆகவே தானும் தனது மகனை இழந்து அவ்வாறான மனநிலையடைவதே அறநெறி என்ற முறையில் தனது மகனின் மேல் தேரைச் செலுத்தி மகன் இறந்ததும் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கிறான். ஆகவே அவனது ஐ. பூ. விகிதாசாரத்தில் அறநெறி வளர்ச்சிக்குரிய ஒளிப்பூத விகிதாசாரம் கூடுதலாக இருந்ததைக் கண்டுகொண்டோம்.

மனுநீதி கண்ட சோழனது மகன் ஒரு பசுக்கன்றை நெரித்த காரணத்தினால் சோழன் மகனை தேர்ச்சில்லால் நெரித்து தாங்கொணாத துக்கத்தையடைகிறான். இங்கு நாங்கள் சிந்திக்கவேண்டிய விசயங்கள் பல உண்டு. பசுக்கன்றை நெரித்தவன் இளம் பிராயத்தவன். பகுத்தறிவு குறைந்தவன். இரக்கசிந்தனை உள்ள ஒருவன் பகுத்தறிவு குறைந்த ஒருவன் தவறுதலாக செய்த செயலுக்காக இரங்க வேண்டியது அவனது அறவழிக்கடமையாகும். ஆனால் இங்கு நடந்ததோ வேறுவிதமான செயல். அரச நீதி எல்லோருக்கும் சமமானதாகத்தான் இருக்கவேண்டும். அரசனது மகனல்லாத வேறு ஒருவன் அத்தவறைச் செய்திருந்தால் சபையில் தீர விசாரித்து சபையோரது கவனத்துக்கேற்ப தண்டனையில் சிறு மாற்றத்தைச் செய்திருக்கலாம். ஆனால் இங்கு நடந்தது வேறுவிதமான செயலாகும். அரசனது மகன் கன்றை நெரித்த விசயத்தை வேறு எவரோடும் ஆராய்வதாயிருந்தால் அவர்கள் இச் செயலுக்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வேறு ஒரு அரசனாக இருந்தால் தனது மந்திரி சபையைக் கூட்டி அவர்களது ஆலோசனையை நாடியிருப்பான். அப்படிப் பலபேர் சேர்ந்து இந்த விஷயத்தை ஆலோசிக்கும்போது இச் சிறுபிள்ளை செய்த தவறுக்கு வேறு ஏதாவது சிறு தண்டனை கொடுக்கவே முடிவெடுத்திருப்பார்கள். ஆகவே சோழன் தனது மனநிலையிலுள்ள ஐந்துபூத விகிதாசார அறநெறிக்கேற்ப தன் கடமையை எவரோடும் யோசிக்காமல் தனது உள்ளமாகிய ஒளிப்பூத விகிதாசாரத்தில் ஆராய்ந்து தனது கடமையை



நிறைவேற்றுகிறான். இச்செய்கை இவனுக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரோ அல்லது பின்னரோ எவரும் செய்ததாக அறிந்திருக்கவில்லை. ஆகவே இதற்கு அடிப்படைக்காரணம் அவரவரது ஐந்துபூதத்தில் ஒளிப்பூத விகிதாசாரத்தின் கூடுதல் தன்மையாகும். ஆகவே எல்லாருக்கும் ஒளிப்பூத விகிதாசாரம் கூடுதலாகவும் குறைவாகவும் மாற்றமடைந்தே இருக்குமென்பது சொல்லாமலே விளங்குகின்றது.

பஞ்ச பாண்டவர்கள் சரித்திரத்தை நாம் எடுத்துக் கொண்டாலும் பஞ்ச பாண்டவரான ஐந்து பேருக்கும் அவர்களது தமையனான கர்னனுக்கும் எவ்வாறு இந்த அறநெறி எண்ணம் ஏற்பட்டது என்பதை ஆராயலாம். பஞ்ச பாண்டவர்கள் பிறக்கமுன் கர்னன் பிறந்ததால் கர்ணனை அவனது தாய் ஒருபெட்டியில் வைத்து ஆற்றில் விடுகிறாள். அந்தக் கர்ணனை துரியோதனன் ஆகியோர் எடுத்து வளர்க்கிறார்கள். ஆனால் துரியோதனன் ஆகிய நூற்றியொருவரும் அறநெறித் தன்மை இல்லாதவர்கள். ஏன் அவ்வாறு உள்ளார்கள் என்பதை ஆராயுமிடத்து பேராசை காரணமாக பஞ்ச பாண்டவர்க்குரிய பங்கைக் கொடுக்க மறுக்கிறார்கள். இப்பேராசை இவர்களது ஐந்து பூதசேர்க்கையில் ஆசைப்பற்று கூடுதலாயமைந்த காரணத்தினால் ஏற்பட்டது என்பதனை உணரமுடிகிறது. ஆனால் இவர்களில் கர்னன தனக்குக் கிடைக்கும் ஊதியத்தை தன்னை நாடி வருவோருக்கு இல்லையென்னாது தானம் செய்கிறான். பஞ்சபாண்டவர்கள் ஐவரும் அறநெறி வழுவாத தன்மையுள்ளவர்கள். இவர்கள் அறுவரும் ஒளிப்பூதமான சூரியனிடமிருந்து பெற்ற மாத்திரையில் பிறந்த காரணமாக அறநெறியில் செயற்பட்டு அதர்மத்தை அழித்து அறநெறி முறையில் இராட்சியத்தைப் பெறுகிறார்கள். இங்கே அறம் எவ்வாறு வேலை செய்தது என்பதை அனுபவத்தில் கண்டு கொண்டோம். அறத்திற்கு மாறாயுள்ள துரியோதனன் பக்கத்திலுள்ள கர்னனும் அவனது ஐந்துபூத விகிதாசாரம் காரணமாக இல்லை என்ற சொல்லை என்றுமே கைக்கொள்ளாமல் இருந்துள்ளான்.

ஆகவே அறம் இப்பிரபஞ்சம் தோன்றுவதற்கு மூலாதாரமாய் அமைந்துள்ளது என்பதையும் நாம் எடுத்த பிறப்பை நீக்கி பிறவாத நிலையை அடைய அறநெறி முதல்வழியாய் உள்ளது என்பதையும் பல வழிகளிலும் உணர்ந்து எமது சஞ்சிகைக்கு ''அறந் தமிழ் ஞானம்'' எனப் பெயரிட்டுள்ளோம்.

எ

இயக்குநர்,
புலோலி கல்வி வளர்ச்சிக் கழகம்,
வே. ஆறுமுகம் புலோலி
''வித்தியாதானம்''

## தானங்கள் மூவகைப்படும்

தானம் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த மனப்பான்மை ஒருவனுக்கு இருக்குமேயாயின் அவன் உயர்ந்தவனாகிறான். அவ்வெண்ணத்தை நெறிப்படுத்தி மனித குலம் நன்மையடையும் போது அவன் மேலும் உயர்ச்சியடைகிறான். இது எமது முன்னோரின் அரிய போதனையாகும். எனவே, எத்தானத்தை எவர் செய்தாலும் போற்றப்பட வேண்டியவர்களாகிறார்கள். அதிலும் குறிப்பாக உத்தம தானம் செய்யும் சான்றோர் தெய்வத்துக்கு அடுத்த படியில் வைத்து பூசிக்கப் படவேண்டியவராவர்.

ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் புலோலி அறிஞர் கந்த முருகேசனார் அவர்களால் ''தமிழகம்'' என்னும் திண்ணைப் பள்ளியில் ஏழைப் பிள்ளைகளுக்கு வித்தியாதானம் வழங்கியமை அண்மைக்கால நிகழ்வுகளில் ஒருஅறப்பணியாகும். இவர் கால் ஊனமுற்றோராகப் பிறந்தும் தானாகவே கல்வி கற்று எதையும் ஏன்? எதற்கு? என்று கேட்டு ஒரு பகுத்தறிவாளனாய் விளங்கியுள்ளார். ஏழை மாணவர்களிடம் பணம் கேளாமலே கல்வி கற்பித்து அநேக பண்டிதர்களையும் வித்துவான்களையும் உருவாக்கியுள்ளார். இவர் பாடிய நூல்களில் ''நல்லை நாவலன் கோவை'' சிறப்பு மிக்கது. தன்னிடம் வரும் மாணவர்களை சமத்துவ ரீதியில் நோக்கி சாதிக்கொடுமையைக் களைய வேண்டும் எனும் பேரவாக் கொண்டிருந்தார். மக்களின் அறிவு வளர்ச்சிக்கு தேவையற்ற இடையூறான சமயசடங்குகளை நீக்கவேண்டும் என்பதில் பேரவாக் கொண்டிருந்தார்.

தனது ஊனமான உடல் நிலையையும் கருத்திற் கொள்ளாது, உணவுத் தேவைகளையும் சுருக்கிக் கொண்டு, மக்கள் சேவையே இறை சேவை எனும் கருத்தினை முதற் பணியாகக் கொண்டு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வழி



காட்டியதற்கு எமது சமுதாயமும், நாமும் நினைவு கூர்ந்து. பெரு நன்றியைக் கூறுவதில் ஆத்ம திருப்தி அடைகிறோம்.

மேலும் ஏறத்தாள நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலக் கல்வி கற்பதில் நாட்டமும் ஊக்கமும் கொண்ட ஏழை மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து பயில முடியாத சூழ்நிலையில் அவர்களுக்கு உள்ளப் பூரிப்புடன் இன்சொல் பேசி தன்னால் தரும சாதனம் செய்யப் பெற்ற நிலப்பரப்பில் தனது சொந்தச் செலவில் கல்விக் கூடம் அமைத்து அதில் வேலாயுதம் மகா வித்தியாலயத்தை உருவாக்கி இலவசக் கல்வி போதித்த பெருந்தகை புலோலி வேலாயுதம்பிள்ளை ஐயா அவர்களின் அறிவு வளர்ச்சிப் பணியையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். அவ்வள்ளலின் செயற்பாட்டினால் வாழ்க்கையில் முன்னேறியோர் ஏராளம்.

இப்பெருமகனாருக்கு எமது சமுதாயமும், நாமும் பெரு நன்றி கூறுவதில் ''ஆத்ம திருப்தி'' அடைகிறோம்.

இத்தொடரில் சமகாலத்தில் அதே புலோலியில் வேறு வடிவத்தில், மனித குலத்தின், ஆத்மீக மேம்பாட்டைக் கருத்தில்வைத்து, அறிவு வளர்ச்சிப்பணியை முதல் நோக்காகக் கொண்டு அறநெறிக்காவலர் ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்கள் ஒரு தரும நிதியத்தை புலோலி மேற்கில் நிறுவி செவ்வனே செயற்படுத்தி வருவது அவருக்கு தனிப்பட்ட முறையில் மாத்திரமன்றி புலோலிக்கும் புகழைச் சேர்த்துள்ளது. இது ஓர் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்பேராசானின் உத்தம தானத்தால் ஆத்மீக வழிச் சிந்தனைகள், செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் முதியோருக்கு அதிக நன்மை பயக்கும் என்பதற்கு ஐயமில்லை.

இத்திருப்பணியைத் தொடர்ந்து நெறிப்படுத்துவதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டியது எமது தலையாய கடனாகும். அப்பெரியாரின் தூயதொண்டு தங்கு தடங்கலின்றித் தொடரப் பிரார்த்திப்போமாக.

இப்படிக்கு
வே. ஆறுமுகம்
இயக்குநர்

10-04-1992

உ

## பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு ஓர் வேண்டுகோள்!

விநாயகர் தரும நிதியத்தின் "அறநெறி விஞ்ஞான மன்றம்" அறநெறி மணிகள் என்னும் நூலை அச்சிடுவித்து, அறநெறித் தேர்வுகளை நடாத்தி, பரிசில்களை வழங்கி, எதிர்காலச் சந்ததியினர் நல் நோக்குடன் வாழ வேண்டுமென்ற பேரவாவினால் எம்மிடம் பாடசாலை முகவரி உள்ள நூற்றியறுபது பாடசாலைகளுக்கு கடந்த வருடம் கார்த்திகை மாதம் மேற்படி நூல்ப் பிரதிகளை இலவசமாக அனுப்பியுள்ளோம். விண்ணப்ப முடிவுதேதி 31-03-92 என சஞ்சிகைமூலம் தெரிவித்திருந்தோம். இத்திகதி வரையில் எமக்கு வடமராட்சிக் கோட்டத்திலிருந்து 14 விண்ணப்பங்களும், மருதனாமடம் கோட்டத்திலிருந்து 04 விண்ணப்பங்களும். பண்டத்தரிப்புக் கோட்டத்திலிருந்து 02 விண்ணப்பங்களுமாக 20 பாடசாலையிலிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இதற்குரிய தேர்வுகள் ஆடிமாதமளவில் நடாத்தப்பெற்று, பரிசில்கள் நவராத்திரி தினமளவில் வழங்கலாமென உத்தேசித்துள்ளோம். சூழ்நிலை காரணமாக வெளி மாவட்டங்களிலிருந்து நாம் எதிர்பார்த்த விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இதனைக் கருத்திற் கொண்டு அடுத்த வருடங்களிலாவது கூடுதலான பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இளம் சிறுவர்களின் மனதில் அறநெறி விதைகளை விதைப்பதற்கான சேவையை மனதில் கொண்டு செயற்பெறுமாறு அன்புடனும், பண்புடனும், பணிவுடனும், இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

*வி. த. நிதியம்,*
*புலோலி மேற்கு, 23-4-92* — நிறுவனர்.



உ

## நினைவு கூறுகிறோம்

எமது நிதியத்திற்கு மிக அருகிலுள்ள மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவனர் உயர்திரு. சிதம்பரப்பிள்ளை ஐயா அவர்களுக்கும், அவரது மகன் நாகலிங்கபிள்ளை ஐயா அவர்களுக்கும் நன்றி கூற வேண்டியது எமது கடமையென உணருகிறோம், உயர்திரு. சிதம்பரப்பிள்ளை ஐயா அவர்கள் சைவமதம் குன்றிய காலத்தில் சைவத்தோடு தமிழையும் வளர்க்கும் நோக்கோடு 1875ம் ஆண்டளவில் மேற்படி இரு பாடசாலைகளையும் தனது சொந்தக் காணியில் நிறுவி ஒழுங்கான நிர்வாகத்தின் கீழ், அயற் கிராம மக்களின் அறிவுக்கண்ணைத் திறந்து அறநெறி வழியில் செயல்பெற்றுள்ளார். இப்பெருமகனாரின் பிற்காலமான 1930ம் ஆண்டளவில் இவரது மகன் நாகலிங்கபிள்ளை அவர்கள் அவரது அறப்பணிகளைக் கண்போல் காத்து, தந்தை வழியில் செயல் பெற்று இப்பாடசாலைகளைப் பேணிக்காத்தார்.

நாமும் எமது கல்வியை 1938 வரை இப்பாடசாலையிலே ஆரம்பம் முதல் இறுதி வரை மேற்கொண்டுள்ளோம். இப்பெண்கள் பாடசாலைக் கட்டிடங்கள் பழுதடைந்து ஆபத்தான நிலையை அடைந்ததும், எவரும் முன்னின்று அக்கட்டிடத்தை உருவாக்க முன்வரவில்லை. இதைக் கருத்திற் கொண்டநாம் எமது கல்வி நன்றிக்கடனாக இக்கட்டிடத்தை அமைத்தே தீர வேண்டுமென்ற நோக்கோடு 1970ம் ஆண்டு புரட்டாதியில் இச்சபையில் பொருளாளர் பதவியை ஏற்று கட்டிட அத்திவாரத்தை போடுவித்து மூன்று மாத காலத்தினுள் பதினாறாயிரம் ரூபா செலவில் 80' X 20' கட்டிடத்தை ஊரவர்களின் பண உதவியுடன் பூரணப்படுத்திக் கொடுத்து முடிந்ததும் சபையிலிருந்து வெளியேறிவிட்டோம்.

எமது ஊரவர்களின் அறிவு வளர்ச்சிக்காக இப்பாடசாலையை உருவாக்கிய பெருமகனார் சிதம்பரப்பிள்ளை ஐயா அவர்களுக்கு எமது நிதியத்தின் சார்பில் பெரு நன்றியைக் கூறுவதில் ஆத்ம திருப்தி அடைகிறோம். அவரது மகன் நாகலிங்கபிள்ளை அவர்களுக்கும் அவரது நன்றியை நினைவு கூர்ந்து எமது நிதியத்தின் சார்பில் பெருநன்றியைக் கூறுவதில் ஆத்ம திருப்தியடைகிறோம்.

*வி. த. நிதியம். 23-04-92* — நிறுவனர்

தமிழ் வளர்ச்சிக் கட்டுரை

# வீண் பெருமைகள் தவிர்ப்போம்
# விஞ்ஞான உலகுடன் கலப்போம்

(முத்தமிழ் மன்ற நூலகம் சு. ஸ்ரீகுமரன், சுன்னாகம்)

முதன்மையாகத் தோன்றிய தமிழும் வளரவில்லை. தமிழனும் வளரவில்லை. ஆனால் நாம் வீண் பெருமை பேசியே காலத்தைக் கழித்தோம். முன்தோன்றிய அந்தத் தமிழை வாழவைக்க என்ன முயற்சி எடுத்தோம்? அந்தத் தமிழை வாழவைக்க ஒரு நாடுண்டா உலகத்தில்? திக்கெட்டும் பரவிவாழ்ந்த தமிழர்கள் தமக்கென்றொரு நாடுண்டென்றோ தமிழ் மொழி எங்காவது அரியாசனத்தில் ஏறியிருக்கிறதென்றோ சொல்ல முடிந்ததா? முடியாது. தமக்குள்ளே ஆயிரம் பிணக்குகளை நிறைத்துக்கொண்டு, தமக்குள்ளே சாதி, சமய, இன முரண்பாடுகளை வளர்த்துக்கொண்டு பெரிதாகப்பேசி என்ன பயன்?

இராவணனின் புட்பக விமானத்தையும், பாரதப்போரில் பாவிக்கப்பட்ட நாகாச்சுரத்தையும் வைத்துக்கொண்டு தமிழன் அன்றே அறிவியலில் உயர்ந்துநின்றான் என்கிறார்கள். அதையாவது தொடரமுடிந்ததா? அன்றைய புலவர்கள் ஆற்றையும் கடலையும் இயற்கையையும் பாடினர், அதிலேயே மூழ்கிப்போயினர். அதனால் சமூகவாழ்வைப் பற்றிச் சிந்திக்கவில்லை, தமதும், தமது சந்ததியினதும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை. நாமின்று ஒரு நாடின்றி — எமக்கென்றொரு ஒன்றிய கொள்கைத் திடமின்றி எமக்கான முன்னேற்றம் குறித்த சிந்தனையின்றி, உலகின் நாலா திசைகளிலும் எடுப்பார் கைப்பிள்ளைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. எந்த நேரமும் இயந்திரப் பொறிமுறையில் நடை பயில்கிறது: நாளுக்குநாள் அறிவியலின் புதிய புதிய கண்டுபிடிப்புகள் உலகையே மாற்றிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின நீல் ஆம்ஸ்றோங் சந்திரனில் கால் வைத்த போது நாம் இங்கிருந்து நிலவைப்பற்றி பாடிக் கொண்டிருந்தோம், ஒவ்வொரு கோள்களிலும் செய்மதிகள் இறங்கிக் கொண்டிருக்கும் — இறக்க முயற்சி நடக்கும் இந்நேரத்தில் நாங்கள் சாதகத்தைப் புரட்டி கோள்கள் நிற்கும் இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.



புதிய சிந்தனைகளை முகிழ்த்த பாரதி பட்டினியால் மடிந்தான்: பேரறிவாளர்களால் அவன் பைத்தியமாக்கப் பட்டான். "செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்ற அவனது பாடலை இன்று அறிஞர்கள் போற்றுகின்றனர். ஆனால் அன்றைய அறிஞர் பெருமக்கள் அப்பாடலுக்கு பரிசு வழங்காமல் நிராகரித்தனர். அவன் ஆயுதம் செய்யச் சொன்னான், நாம் கத்திகள் செய்து ஒருவரையொருவர் வெட்டிக் கொண்டோம். வெள்ளிப் பனிமலையில் உலாவச் சொன்னான், நாமோ வெள்ளையன் ஏறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். பெண்ணடிமை நீங்கப் பாடினான். பெண்ணே பெண்ணை வதைக்கும் கொடுமை நடந்தது.

நாங்கள் உலக இயக்கத்தோடு ஒன்றிச்செல்ல எவ்வளவோ தூரம் நகரவேண்டியவர்களாயுள்ளோம். இன்னமும் இருளின் நடுவே நின்று கொண்டு குப்பி விளக்கொளியில் உலகையே அளக்க நினைக்கும் எமது மடைமைத்தனத்தை வேரறுப்போம்.

பழமையைப் போற்றுவோம். கம்பனும், வள்ளுவனும் இளங்கோ அடிகளும் ஔவையாரும் எம்மை வழிப் படுத்தட்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் தேவை. நாமும் காலத்துடன் இணைந்து நடப்போம். பேய், பிசாசு, மூட நம்பிக்கைகளை எம்மிலிருந்து அகற்றி, அறிவியலோடு ஒன்றி நடப்போம்.

யப்பானைப் பாருங்கள், உலக வல்லரசான அமெரிக்காவிற்கே பொருளாதார வல்லமையில் சவாலாக நிற்பது யப்பானே. அங்கே இயற்கை வளமில்லை, கனிய வளமில்லை. பூகம்பமும் எரிமலையும் வெடித்துக்கிளம்பும் பூமியது. 1940களின் பின்னர் – அதாவது அரை நூற்றாண்டு காலத்தில் அதன் வளர்ச்சிதான் எவ்வளவு!

அங்கே மத வேறுபாடுகளோ, சாதி முரண்பாடுகளோ இல்லை. அவர்களது குறிக்கோள் உழைப்பு ஒன்றே எறும்பு போல உழைத்துக் கொண்டிருக்கும் அவர்களது அதீத முயற்சியே இன்று உலகைப் பிரமிக்க வைத்துள்ளது. எதுவுமே இல்லாமல் இன்று நாம் இறுமாந்திருக்கிறோம். உலகம் எவ்வளவோ தூரம் நகர்ந்துவிட்டது. எவ்வித பிரயோசனமுமின்றி மேலும் இறுமாந்து இருப்போமாயின் முன்தோன்றிய தமிழை முன்கூட்டியே மறையச் செய்தவர்களாகி விடுவோம்.

அதற்கு எதிராக நாம் எமது வல்லமையை ஒன்று சேர்த்தால் நாளை எமக்கொரு நல்ல எதிர்காலம் உண்டு என உறுதியாக நம்பலாம்.

சுபம்!

# வரவேற்கிறோம்

எமது நிதியத்தினால் 12 வயசிற்குட்பட்ட சிறுவர்களுக்கான ஓர் மாதாந்த சஞ்சிகையை வெளியிட எண்ணியுள்ளோம். சிறுவர்களுக்கான இச்சஞ்சிகை கடமை- கண்ணியம் - கட்டுப்பாடு மேலோங்கும் வகையில் சிந்தனையைச் செலுத்தக் கூடிய கட்டுரைகளையும் பொன்மொழிகளையும் மனதில் படரக்கூடிய கருத்துக்களையும் அனுப்பி உதவுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

நிறுவனர்

உ

## பொது நிறுவனங்களின் பாராட்டுக் கடிதங்கள்

தமிழீழம் சகல நெருக்கடிகளிலும் எதிர்நோக்கி இருக்கும் இவ்வேளையில் எமது தமிழையும் எமது இனத்தையும், சோர்வடைய விடாமலும் ''விநாயகர் தரும நிதியம்'' மாதாந்த ஆத்ம சிந்தனைச் சஞ்சிகையை இலவசமாக பொது நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் வாரி வழங்குவதை எமது நிலையம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.

4-3-1992 கலையரசி சனசமூக நிலையம், தொண்டமனாறு

தற்சமயம் நீங்கள் எங்களுக்கு மாதந்தோறும் அறத்தமிழ் ஞானம் என்னும் தத்துவங்களும், கருத்துக்களும் இறைவனை அடைவதற்குரிய வழிகளைக் காட்டும் புத்தகங்களை அனுப்பி வருகிறீர்கள். அவ்வரிய பொக்கிஷத்தை எங்களிடம் வரும் பக்தர்கள், அடியார்கள் ஆகியோர்க்கு படிக்கக்கொடுத்து எங்கள் நூலகத்தில் வைத்துள்ளோம். உங்கள் தமிழ்ப் பற்றும், ஏழைகள், அடியார்கள், அநாதைகள் ஆகியோருக்கு உதவும் மனமும், தருமம் செய்யும் மனமுடைய நீங்கள் பலகாலம் வாழவேண்டுமென எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுதல் செய்கிறோம்.

ஆனந்த ஆச்சிரமம், செல்வச்சந்நிதி. தொண்டமனாறு.
2-4-1992

பண்டைத்தமிழ்ப் பண்பாட்டு கருவூலங்களை அழகிய தமிழில் பாமரமக்களும் விளங்கக்கூடிய வகையில் இலவசமாக வெளியிட்டுள்ளீர்கள். அறத்தமிழ் ஞானம், ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை அரும்பெரும் பணி. தங்களின் அரிய சீரிய பணியினையும், தயாள சிந்தனையையும், அனுபவ அறிவாழத்தையும் பாராட்டுகின்றோம். தங்கள் நற்பணி தொடர வாழ்த்துகின்றோம்.

சந்திரபுரம் இந்து இளைஞர் சங்கம்,
27-02-1992. மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தாங்கள் அனுப்பிய அறநெறி மலர்கள் இப் பகுதி மாணவ, மாணவிகளை சமய உணர்வைத் தூண்டிவிட கோலாக அமைந்துள்ளது. இவ் இக்கட்டான காலகட்டத்திலும், தாங்கள் பணி செய்வதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். தங்கள் நற்பணி தொடரட்டுமென வாழ்த்துகிறோம்.

14-1-92 மகாதேவா ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி

குரு வணக்கம், பிள்ளையார்சுழி, தமிழில் கையொப்பம் அறநெறிகள் யாவும் மனதை நல்வழிப்படுத்துவது மட்டும் அமையாமல் அறிவையும் உயர்த்தும் பணிச்சிக்கு எமது பாராட்டுக்கள். 'தொடரனும் தொன்டு வளர்க தம்பணி'.

கட்டைவேலி, யாக்கரை விநயகர் வித்தியாலயம்,
10-1-1992 கரவெட்டி.

தாங்கள் அனுப்பியிருந்த பிரசுரங்கள் 7 ஐ பெற்றுக்கொண்டேன். மிக்க மகிழ்ச்சி நன்றி. நல்லதோர் செயல் நல்க இப் பூமிதனில் அவதரித்துள்ளீர்கள். தாங்களும் எமது ஆன்மாவை ஈடேற்ற தாங்கள் நல்கும் உணவே இப் புத்தகங்கள் உய்வதற்கோர் வழிகாட்டி உதவும். நங்களின் ஆத்மீக வாழ்வு ஈடேறி நல்ல மெய்யுணர்வு பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எஸ். நடராசா, களஞ்சிய நலன்புரிக் கிளை,
1-1-92. செயலகம், யாழ்ப்பாணம்.

## எமது வெளியீடுகளை பின்வரும் விலாசங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கலைச்சோலை — வல்வெட்டித்துறை

அன்னை மருந்தக மருந்துச்சாலை — பருத்தித்துறை

அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவனம் — கண்டிறோட், கைதடி

அபிராமி மருந்தகம் — நீர்வேலி

பூபாலசிங்கம் புத்தகசாலை — யாழ்ப்பாணம்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை — யாழ்ப்பாணம்

எஸ். கே. சாமி அன் கோ. — நெல்லியடி

தனலக்சுமி புத்தகசாலை — சுன்னாகம்

முத்தமிழ் மன்ற நூலகம் — சுன்னாகம்

சூரியா பார்மசி — புத்தூர்

★

இச் சஞ்சிகை புலோலி மேற்கு பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினருக்காக ஊப்பிட்டி ஸ்ரீவாணி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.